பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 03 திங்கட்கிழமை 19.07.2021 கதிர் 256

### இனிது ரகசியம் அல்ல!

கொழும்பிலிருந்து தமிழ் நண்பர் ஒருவருக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தேன். நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஒரு கூட்டத்துக்குப் போயிருந்தார் என அறிந்திருந்தேன். அதனால் அது பற்றி விசாரிக்கவே இந்த அழைப்பு.

பக்கம்02

## யாழ்.மாவட்டத்தில் கொரோனா சாவு 113ஆக அதிகரிப்பு

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்., வண்ணார் பண்ணையைச் சேர்ந்த 63 வயதுடைய பெண் ஒருவரே நேற்று

2

## கொடிய 'டெல்டா' வைரஸ் தீவிரமடையும் பேராபத்து!



### சன்ன ஜயசுமன எச்சரிக்கை

இந்தியாவிலிருந்து உலக நாடுகளுக்குப் பரவியுள்ள கொடிய வைரஸான 'டெல்டா' தொற்று இலங்கையில் தீவிரமடையும் பெரும் ஆபத்து உள்ளது என மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகின் பல

2

## நாட்டில் மேலும் 46 பேர் மரணம்

### மொத்த சாவு 3,779

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 46 பேர் சாவடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 30 ஆண்களும், 16 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 30 - 50 வயதுகளுக்கு இடைப்பட்ட

2

# முன்னரை விடவும் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்படும் இலங்கை



### பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 19

'டெல்டா' வகை நாட்டில் முதன்மை கொரோனா வைரஸ் தொற்றாக உருவெடுக்கின்றது. இதனால நாடு முன்னர் எதிர்கொண்டதை விடவும் ஆபத்தான நிலைக்கு தள்ளப்படும்.

– இவ்வாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டினார்.

2

## நேற்று 1,402 பேருக்கு கொரோனா தொற்று




நாட்டில் நேற்று 1,402 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதையடுத்து

2

## 'மேதகு' படத்தை விற்பனை செய்த 2 இளைஞர்கள் சி.ஐ.டியால் கைது




தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 'மேதகு' தமிழ்த் திரைப்படத்தை இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்து விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில், நுவரெலியா குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

11

## பொறுப்புக்கூறல், மனித உரிமை தீர்மானங்கள் தமிழரின் அரசியல் தீர்விலேயே முடியவேண்டும்



### சுமந்திரன் வலியுறுத்து

யுத்த முடிவின் பின்னர் கடந்த பத்து வருடங்களாக ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பிலான தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டு கின்ற போதிலும் இன்னமும் இறுதித் தீர்வு கிடைக்கவில்லை. வெறுமனே பொறுப்புக்கூறல், மனித உரிமை விடயங்களை கையாளுவதுடன் தீர்மானங்கள் நின்றுவிடாது. இறுதியாக தமிழ் மக்களின் அரசியல் தீர்விலேயே இவை முடியவேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேசத்திடம் தொடர்ச்சியாக வலியுறுத்தி

2

## தூத்துக்குடிக்கு நீர்மூழ்கியை திடீரென நகர்த்தியது இந்தியா

### பாதுகாப்புக் குறித்துக் கரிசனை



(ந.லோகதயாளன்)

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிப்பதையடுத்து இலங்கைக்கு அண்மையாகவுள்ள தூத்துக்குடித் துறைமுகப் பகுதியில் இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான நீர்மூழ்கிக் கப்பல் நடமாடுகின்றது.

அதிநவீன நீர்மூழ்கிக் கப்பலான 'சிந்துஷாஸ்ட்ரா' தூத்துக்குடி துறைமுகத்திலுள்ள ஐ.என்.எஸ்.

2

## நல்லூரில் ஆசிரியரின் வீட்டில் திருடியவர் 20 லட்சம் ரூபா தங்க நகைகளுடன் கைது!



(இ.கலையமுதன்)

யாழ்., நல்லூர் ஆலயத்துக்கு அண்மையில் 20 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார்

11

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் என்னிடம் கேட்ட ஒரு கேள்விக்கு என்னிடம் பதில் இல்லை. அதனால் வாசகர்களிடம் அதனை முன்வைக்கிறேன். அவர்களே சொல்லட்டும் பதிலை.

ஜனநாயகத்தை மீட்டு, மனித உரிமைகளைப் பாதுகாத்து, சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் கூட்டு முயற்சியை ஆரம்பிப்பதற்காக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் கொழும்பில் நேற்று முன்தினம் 'நியாயமான சமூகத்திற்கான தேசிய இயக்கம்' என்ற அமைப்பின் ஏற்பாட்டில் ஒரு சர்வ கட்சிக் கூட்டம் நடைபெற்றது. பெரும்பாலும் அனைத்து எதிரணிக் கட்சிகளும் கலந்து கொண்டன.

தமிழரசு சார்பில் கொழும்பில் நின்ற அதன் தலைவர் மாவை சேனாதிராசா, பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் ஆகியோர் பங்கு பற்றினர்.

முதலில் கரு ஜயசூரிய உரையாற்றினார். தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா, மூன்றாவதாக சுமந்திரன் உரையாற்றினார்.

சுமந்திரன் தமது உரையில் தமது கட்சித் தலைவர் மாவையைப் புகழ்ந்து தள்ளி ஐஸ் வைக்கத் தவறவில்லை. ஜனநாயகத்தை மீட்பதற்காக முதலில் நீண்ட காலம் சிறை சென்றவர் எமது கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாதான் என்று சுமந்திரன் புகழ்ந்தபோது புளகாங்கிதத்துடன் மெல்லிய தலையசைப்பைக் காட்டி அதனை ஏற்றுக் கொண்டார் மாவையர். இந்த ஐஸில் கட்சித் தலைவருக்கு ஜன்னி கண்டு, பிதற்றல் ஏற்படாவிட்டால் சரிதான்.

அது அல்ல விடயம். என் நண்பர் கேட்ட கேள்வி வேறு.

*"பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியின் அதிகார அச்சுறுத்தலில் இருந்து தமிழ் மக்களையும், தமிழர் தேசத்தையும் ஒன்றுபட்டுக் காப்போம், அது பற்றிப் பேசுவோம் வாருங்கள் என்று, இப்படி கொழும்புக் கூட்டம் மாதிரி அழைத்தால் தமிழ்க் கட்சிகள் எல்லாம் பெரிய பிகு பண்ணாமல் வருமா?"* – என்று கேள்வி எழுப்பினார் அவர்.

*"தமிழரசுக் கட்சி வரும், அண்மையில் ரெலோ முன்னெடுத்த முயற்சிக்கும் தமிழரசு வந்தது. அதே போல அதற்கு முன்னர் பத்துக் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்படுவதற்கான அழைப்பை தமிழரசே முன்னெடுத்தது. தமிழர்களின் பிரதான கட்சியான தமிழரசு வரும்"* – என்றேன் நான்.

*"தமிழரசுடன் எனக்கும் பிரச்சினை இல்லை. அக்கட்சி வரும் என்று எனக்கும் தெரியும். கொழும்புக் கூட்டத்தில் தமிழரசு பங்கு பற்றியதும் கூட எனக்கு ஆச்சரியம் இல்லை. அது எதிர்பார்க்கப்பட்டது தான்."* – என்றார் அவர்.

*"மற்ற தமிழ்க் கட்சிகள் என்ன செய்யும்?"* – என்றும் அவர் கேட்டார்.

*"உங்களுக்கும் தெரியும்தானே... கொஞ்சம் சிக்கல்தான்... தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தன்ரை கட்சி மட்டும் தான் 24 கரட் சொக்கத் தங்கம் மாதிரித் தூயது, சுத்தமானது என்று நினைக்கின்றது. மற்றக் கட்சிகள் கலப்படங்கள் என்பது அதன் உறுதியான நிலைப்பாடு. அதனால் மற்றக் கட்சிகள் எதனுடனும் சேராது. மற்றத் தமிழ்க் கட்சிகளுடன் ஒரு மேசையில் இருந்தால் தீட்டுப் பட்டுவிடும் என்ற மாதிரி ஓர் ஆசார எண்ணம் – கிறுக்கு – அக்கட்சிக்கு. விக்கியின் கட்சியும் ஒரு மாதிரித்தான். எப்ப சேரும், யாருடன் சேரும், எப்ப காலை வாரும் என்று தெரியாது. சுமந்திரன் வந்தால் அனந்தியின் கட்சி வெளி நடப்புச் செய்யும். இப்படிப் பல இடியப்பச்சிக்கல்கள் உள்ளன. தமிழ்க் கட்சிகளை ஒரு மேசைக்குக் கொண்டு வாறதும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற மாதிரி ஓர் அசகாய சூரத்தன வேலைதான்."* – என்றேன்.

*"இப்ப... எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் ஒரு குரலில் பேச வைப்பதற்கு, ரெலோ எடுத்த முயற்சி தொடர்பில் பொன்னம்பலத்தாரின்ரை கட்சி பதிலே போடவில்லை என அறிஞ்சன்...!"* – என்றும் நான் சொன்னே.

*"ஓம். எல்லாம் கேள்விப்பட்டனான். அதனால்தான் இந்தக் கேள்வி..."*–என்றார் அவர். தொடர்ந்து அவர் முன்வைத்த கேள்விக்கு என்னிடம் பதில் இல்லை. அதனால் கேள்வியை அப்படியே வாசர்களிடம் திருப்பி விடுகிறேன்.

*"கொழும்பிலை கரு ஜயசூரிய கூட்டிய கூட்டத்துக்கு – எதிர்க்கட்சிகளை ஒன்றுபட்டுச் செயற்பட வைக்கும் முயற்சிக்கு – அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. கூட்டத்துக்கு சமூகம் தந்த கட்சிகள் ஒருபுறம் இருக்க, தவிர்க்க முடியாத காரணங்களினால் கூட்டத்துக்கு சமூகம் தராத கட்சிகளின் விவரமும், அத்தோடு இந்த முயற்சிக்கு வாழ்த்துத் தெரிவித்து ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதிமொழி அளித்த கட்சிகளின் வாழ்த்துச் செய்திகளும் அங்கு வாசிக்கப்பட்டன. ரெலோ தலைவர் செல்வமும், புளொட் தலைவர் சித்தார்த்தனும் தாங்கள் கொழும்புக்கு வெளியே நிற்கின்றமையால் அந்தக் கூட்டத்துக்கு சமூகம் தர முடியவில்லை, அதற்கு வருந்துகின்றோம், எங்கள் ஒத்துழைப்பும், பங்களிப்பும் இந்த முயற்சிக்கு உண்டு என்று செய்தி அனுப்பியிருந்தனர். அவை வாசிக்கப்பட்டன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரனும் அந்த முயற்சியை சிலாகித்து, வாழ்த்தித் தனித் தனியாக செய்திகள் அனுப்பியிருந்தனர். அவையும் வாசிக்கப்பட்டன."* – என்று கூறிய அந்த நண்பர் அடுத்து ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டார்.

*"தமிழர்களை ஒன்றுபட அழைத்தால் திமிர்த்தனத்தில் புறமொதுக்கி, பிகு பண்ணி, ஒத்துழையாமல், உதாசீனப்படுத்தி, பெரும் பந்தா பண்ணும் சில தரப்புகள், சிங்களவன் நடத்தும் முயற்சிக்கு மட்டும் கழுவிக் கொடுப்பது மாதிரி வாழத்துச் செய்தி எல்லாம் அனுப்பி பெரிய படம் காட்டுகின்றார்களே...? இது நீதியா?"* – என்று கேட்டார் அவர்.

*"தமிழர்கள் ஐக்கியப்பட முடியாமைக்கு இத்தகைய பந்தாக்கள்தான் காரணம்..."* என்று விசனத்துடன் பதில் அளிப்பதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

உங்களிடம் வேறு ஏதேனும் விளக்கம் இருக்கின்றதா வாசகர்களே அவருக்குச் சொல்வதற்கு?

– மின்னல் –

---

## நேற்று 1, 402...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 84 ஆயிரத்து 914 ஆக எகிறியுள்ளது.

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட 843 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 56 ஆயிரத்து 676 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் தற்போது 24 ஆயிரத்து 459 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

---

## கொடிய 'டெல்டா'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடுகளில் கொரோனா வைரஸின் பல வகையான மாறுபாடுகள் பரவி வருகின்றன.

அந்தவகையில் 'டெல்டா' வைரஸ் வகை உலக நாடுகளில் தற்போது ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில், இலங்கையால் அதிலிருந்து தப்பிக்க முடியாது.

எனினும், தடுப்பூசி பெற்றவர்கள் 'டெல்டா' மாறுபாட்டினால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளது.

இலங்கையில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் 'அஸ்ட்ரா செனெகா', 'பைசர்' மற்றும் 'சினோபார்ம்' தடுப்பூசிகள் டெல்டா வகைகளுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்கின்றது.

இதனிடையே தென் அமெரிக்காவில் பெரு மாநிலத்தை மையமாகக் கொண்ட பல நாடுகளில் 'லாம்ப்டா' வகை வைரஸ் பரவி வருகின்றது. அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தை மையமாக கொண்ட பல நாடுகளில் 'எப்சிலின்' வைரஸ் பரவி வருகின்றது – என்றார்.

## தூத்துக்குடிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்ட பொம்மன் கடற்படைக் கப்பல் தளத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையையொட்டி சீனா தனது பலத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளது என்ற சந்தேகம் உள்ளது இலங்கையில் உள்ள துறைமுகங்களை சீன நிறுவனங்கள் குத்தகைக்கு எடுப்பதாகவும் இந்தியா ஐயம் கொள்கின்றது. இலங்கையோடு இந்திய அரசு நட்புறவை விரும்பினாலும் தமிழகத் தலைவர்கள் இலங்கையை நம்புவது கிடையாது. இதேநேரம், இந்தியாவின் நட்பு நாடான இலங்கை தற்போது சீனாவுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது என இந்தியா கருதுகின்றது. சீனாவும் இலங்கைக்குப் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காகக் கடன்களை வாரி வழங்கி வருகின்றது. இந்தியாவின் வட பகுதியான லடாக் பகுதியில் சீனா ஆக்கிரமிப்பில் ஈடுபட்டதால் அங்கு ஏற்பட்ட பதற்றம் இன்னும் முழுமையாக நீங்கவில்லை. இரு நாட்டுப் பிரதிநிதிகள் இடையே பேச்சு வார்த்தை பலமுறை இடம்பெற்றாலும் அங்கு முழு அமைதி ஏற்படவில்லை.

இந்த நிலையிலேயே இந்தியாவின் தென்பகுதியான தமிழகக் கடலோரம் இலங்கையை அண்டிய பகுதியில் சீனா தனது கப்பற்படையை வலிமைப்படுத்த எண்ணுகின்றது. இது சீனா – இந்தியா போர் பதற்றத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் ஐ.என்.எஸ்.கட்டபொம்மன், தூத்துக்குடி அனல்மின் நிலையம், கூடங்குளம் அணு மின் நிலையம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் என்பவற்றோடு தற்போது புதிதாக குலசேகரப்பட்டினத்தில் அமைய உள்ள ரொக்கெட் ஏவுதளம் என முக்கிய மையங்கள் உள்ளன.

அதன்படி, நாட்டின் அனைத்து எல்லைகளிலும் பீரங்கிகள், அதிநவீன போர் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள், விமானம் தாங்கி கப்பல்கள் உள்ளிட்டவை தயார் நிலையில் வைக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதே நேரம் தேவை ஏற்படின் போர் விமானங்கள் சாலைகளில் இறங்கும் வண்ணம் சாலைகளும் அமைக்கப்படுகின்றன.

---

## நாட்டில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

08 ஆண்களினதும், 05 பெண்களினதும் மரணங்கள் பதிவாகியுள்ளன.

அத்துடன் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 22 ஆண்களினதும் மற்றும் 11 பெண்களினதும் மரணங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 779 ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

---

## முன்னரை விடவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டின் பல பகுதிகளிலும் 'டெல்டா; கொரோனா மாறுபாடு பதிவாகி வரும் நிலையில், பயணக் கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்துவது பொருத்தமற்றது.

தற்போதைய நிலையில், தடுப்பூசித் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்தியுள்ள பல நாடுகளும் 'டெல்டா' வைரஸ் பரவலைத் தடுக்க பயணக் கட்டுப்பாடுகளை மீண்டும் அமுல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளன.

நாட்டின் தற்போதைய நிலை புறக்கணிக்கக்கூடிய சூழ்நிலை அல்ல. மிகவும் ஆபத்தான நிலைமையை நாடு எதிர்கொண்டுள்ளது.

அரசும் கொள்கை வகுப்பாளர்களும் பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதையும், பொதுமக்கள் அனைத்தையும் மறந்து வருவதையும் காண்கின்றோம்.

இந்தச் சூழ்நிலையை அரசும் மக்களும் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். ஒரு பேரழிவு சூழ்நிலையைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் அது நாட்டில் மிகவும் துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைக்கு வழிவகுக்கும் – என்றார்.

## பொறுப்புக்கூறல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருகின்றது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஜெனிமா தீர்மானத்தை தொடக்கி வைத்தவர்கள் அமெரிக்கா என்ற காரணத்தினால் தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் அமெரிக்காவுக்கு முக்கிய பொறுப்பு இருக்க வேண்டும். கடந்த 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்களின்போது பொறுப்புக்கூறல் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. இடைநடுவே அமெரிக்கா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து வெளியேறியிருந்தாலும் கூட தற்போது மீண்டும் அவர்கள் மனித உரிமைகள் பேரவைக்குள் வரவுள்ளனர். இது மிகப் பெரிய விடயமாகவே நாம் கருதுகின்றோம்.

தற்போதும் பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் எமது விவகாரங்களைக் கையில் எடுத்துள்ளன. ஆனால், அமெரிக்கா மீண்டும் மனித உரிமைகள் பேரவைக்குள் வருவது மிக முக்கியமான அதேவேளை, தீர்வுகளை விரைவுபடுத்தும் செயற்பாடுகளாக அமையும். எனவே, இம்முறை இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயங்களில் அமெரிக்காவின் தலையீடுகள் இருக்க வேண்டும் என்பதை அமெரிக்கத் தூதுவருடனான சந்திப்பில் எடுத்துக் கூறினோம். பிரிட்டன் தூதுவருடனான சந்திப்பிலும் இந்த விடயங்களை நாம் தெரிவித்திருந்தோம்.

குறிப்பாக இம்முறை நிறைவேற்றப்பட்டுள்ள ஜெனிவா பிரேரணையில் சாட்சியங்களைச் சேகரித்தல், உண்மைகளைக் கண்டறியும் பொறிமுறையின் போது அதற்கான நிதி ஒதுக்கீடுகளை செய்வது போன்ற விடயங்கள் முன்னெடுக்கப்படும். அதற்கான ஒத்துழைப்புகளை அமெரிக்கா முன்னெடுக்கும் எனக் கூறியுள்ளனர்.

கடந்த பத்து வருடங்களாக ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்ற போதிலும் இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை. ஆகவே, வெறுமனே பொறுப்புக்கூறல், மனித உரிமை விடயங்களை கையாளுவதுடன் நின்றுவிடாது இறுதியாக இவை அரசியல் தீர்வில் வந்து முடியவேண்டும். அதனையே நாம் எதிர்பார்க்கின்றோம்.

இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட, காணாமலாக்கப்பட்ட எமது மக்களுக்கு நீதி கிடைக்கப்பெற வேண்டும். அதேபோல், அரசியல் தீர்வே எமது பிரதான இலக்காக உள்ளது.சகல நகர்வுகளும் இறுதியா எமது மக்களுக்காக நிரந்தர தீர்வு ஒன்றில் முடிய வேண்டும் என்பதை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். அமெரிக்கத் தூதுவரிடமும் இதனை நாம் கூறினோம்.

எனவே, செப்டெம்பர் மாதத்தில் மீண்டும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூடுகின்றது. இதன்போது இலங்கை குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படும் வேளையில், அமெரிக்கா வலுவான நிலைப்பாடொன்றை முன்னெடுத்து அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். அதேபோல் அரசியல் அமைப்பு ரீதியிலான தீர்வுகளுக்கு நாம் முன்நகர வேண்டும் – என்றார்.

---

## யாழ்.மாவட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளார்.

இதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 113 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டின் நீதி எங்கு உள்ளதென்பதை தேடிப்பார்க்க வேண்டி இருக்கின்றது

## சிறிதரன் எம்.பி. காட்டம்



நாட்டின் சட்டம் மற்றும் நீதி ஆகியன எங்கு உள்ளதென்பதை தேடிப்பார்க்க வேண்டிய நிலைமையே தற்போது காணப்படுகின்றதென நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

கடலட்டை பண்ணை உருவாக்குவது தொடர்பாகக் கடந்த 2017 மார்ச் 8 ஆம் திகதி வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

அதில், கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரமே அதிகமான பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டு இருக்கின்றன.

குறிப்பாக 11 இடங்கள், கடலட்டை பண்ணைக்குப் பொருத்தமான இடங்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை அரியாலையில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், அப்பகுதி பிரதேச செயலாளரின் அனுமதி பெறப்பட்ட பின்னரே இரண்டு பரப்புக் காணிக்குள் கடலட்டை உற்பத்தி செய்ய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு கடலட்டை குஞ்சுகளை உற்பத்தி செய்ய யாழ். மாவட்டத்தில் அனுமதி பெற்றவர்கள், அதனைத் தாண்டி கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லைக் கிராமமான கௌதாரிமுனைக்கு வந்து, இரண்டு ஏக்கரை வலுக்கட்டாயமாக பிடித்துள்ளனர்.

அதாவது அப்பகுதி மீனவ சங்கங்களின் அனுமதியோ, பிரதேச செயலக அனுமதியோ இல்லாமல் இன்னொரு நாட்டை சேர்ந்த நிறுவனம் இடத்தை பிடித்துள்ளது.

அதற்கெதிராக முறைப்பாடு அறிவித்தும் இதுவரை அவர்கள் கைது செய்யப்படவில்லை.

அவ்வாறாயின் இந்த நாட்டினுடைய சட்டம், நீதி எங்கு உள்ளதென்பதை தேடிப்பார்க்க வேண்டியுள்ளது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வாசுதேவ நாணயக்காரவின் அமைச்சுப் பதவியில் மாற்றம்?



சமகால அரசாங்கத்தில் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாக கூறப்படும் முதல் அமைச்சரவை மறுசீரமைப்பு நடவடிக்கையின் போது நீர்வழங்கல் அமைச்சில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நீர்வழங்கல் அமைச்சராக வாசுதேவ நாணயக்கார செயற்படுகின்றார்.

இந்நிலையில், நீர்வழங்கல் அமைச்சராக முன்னர் செயற்பட்ட அமைச்சரிடம் இந்த அமைச்சு பதவியை வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அமைச்சரும் தனது தற்போதைய அமைச்சர் பதவியில் அவ்வளவு அக்கறை காட்டவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற நீண்ட வரலாற்றைக் கொண்ட வாசுதேவ நாணயக்கார முதல் முறையாக அமைச்சரவை அமைச்சராக தற்போதைய அரசாங்கத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்.

வாசுதேவ நாணயக்கார 1970 ஆம் ஆண்டு முதன்முதலில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தினார். தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் 1970 ஆம் ஆண்டில் முதல் முறையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.

வாசுதேவ நாணயக்கார தனது நாடாளுமன்ற வரலாற்றில் பல அரசாங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தாலும், அவர் எந்தவொரு அமைச்சரவை அமைச்சுப் பதவியையும் வகித்தவரில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் மேலும் சில விலங்குகளுக்கு கோவிட்



தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் இரண்டு சிம்பன்சிகள் மற்றும் இரண்டு ஒராங்குட்டான்களுக்க கோவிட் தொற்றியுள்ளமை பி.சி.ஆர். பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வனவிலங்கு இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவிடம் வினவிய போது, அவ்வாறான அறிக்கை ஒன்று கிடைத்துள்ளதென குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அந்த விலங்குகளுக்கு மேலும் சில பரிசோதனைகளை மேற்கொண்டு அதனை உறுதி செய்து கொள்ளுமாறு மிருகக்காட்சிச் சாலை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அறிக்கை எப்படியிருந்தாலும் அந்த 4 மிருகங்களும் தற்போது ஆரோக்கியமாக இருக்கின்றன என தனக்குத் தகவல் கிடைத்துள்ளதென இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

எப்படியிருப்பினும் இது தொடர்பில் தகவல் கிடைத்த பின்னர் குறித்த 4 விலங்குகளும் ஏனைய விலங்குகளிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இரண்டு சிங்கங்களுக்கு கொரோனா தொற்றுக்குள்ளாகிய போதிலும் தற்போது அந்த சிங்கங்கள் ஆரோக்கியமாக உள்ளன.

மிருகக்காட்சிச் சாலைகளை திறப்பதற்கு சுகாதார பிரிவுகளிடம் இருந்து அனுமதி கிடைத்துள்ள போதிலும் கொவிட் அச்சம் காரணமாக தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையை திறக்காமல் இருப்பதற்கு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

# டெல்டா திரிபின் பரவல் கட்டுப்பாட்டில் உள்ளது

## வைத்தியர் நதீகா ஜானகே தெரிவிப்பு

இலங்கையில் டெல்டா கொவிட் திரிபின் பரவல் இன்னும் கட்டுப்பாட்டில் உள்ளதாக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைராலஜிஸ்ட் வைத்தியர் நதீகா ஜானகே தெரிவித்துள்ளார்.

புதிய சுகாதார வழிகாட்டுதல்களை மக்கள் எந்த அளவிற்குக் கடைப்பிடிக்கின்றனர் என்பதைப் பொறுத்து டெல்டா திரிபின் பரவலானது அமைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

'நாங்கள் இன்னும் இங்கிலாந்து திரிபினை அதிக மாதிரிகளில் காண்கிறோம். அவ்வப்போது டெல்டா திரிபினை பார்க்கிறோம். அதாவது டெல்டா திரிபினை கட்டுப்படுத்தும் நிலையில் நாங்கள் இன்னும் இருக்கிறோம்.

எனினும், எதிர்காலத்திலும் டெல்டா திரிபின் பரவலை கட்டுப்படுத்த முடியுமா என்பதே கேள்விக்குறியாக உள்ளது. புதிய வழிகாட்டுதல்களை நாம் எந்த அளவிற்கு கடைப்பிடிக்கின்றோம் என்பதைப் பொறுத்தே இதனைக் கட்டுப்படுத்த முடியும். - என்றார்.

# இரண்டு வான் வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

ஹொரணை – பாணந்துறை பிரதான வீதியின் குலுபன பிரதேசத்தில் இரண்டு வான் வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளாகி உள்ளன.

குறித்த விபத்தில் 05 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. விபத்து ஏற்பட்ட போது ஒரு வான் வாகனத்தினுள் சிக்கி இருந்த காயமடைந்தவர்கள் பெரும் சிரமத்துக்கு பின்னர் வெளியில் மீட்கப்பட்டுள்ளனர்.

பின்னர் பொலிஸார் மற்றும் தீயணைப்பு பிரிவின் அதிகாரிகள் வருகை தந்து அவர்களை வைத்தியசாலையில் சேர்க்க நடவடிக்கை எடுத்திருந்தனர்.

# மற்றுமொரு தொகுதி அரசியல் கைதிகளின் விடுதலையினை உறுதிப்படுத்தியது அரசு

இலங்கையில் பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் தொடர்பில் பல செய்திகள் தினந்தோறும் வெளிவந்த வண்ணமே உள்ளன.

அந்த வகையில், கடந்த மாதம் பொசன் போயா தினத்தினை முன்னிட்டு தமிழ் அரசியல் கைதிகள் 16 பேர் உள்ளிட்ட சிறு குற்றங்களைப் புரிந்த 93 பேர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், மற்றுமொரு தொகுதி அரசியல் கைதிகளின் விடுதலையினை அரசு உறுதிப்படுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# பெற்றோரை பார்க்கச் சென்ற குடும்பம் இளம் தாய், குழந்தை பரிதாப சாவு

காலி - கொழும்பு வீதியில் பட்டம் ஒன்றில் இருந்த நைலோன் நூல் மோட்டார் சைக்கிளில் சிக்கியமையால் அதில் பயணித்த தாய் மற்றும் ஒன்றரை வயதுடைய குழந்தை உயிரிழந்துள்ளனர்.

மேலும் மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை மற்றும் 6 வயதுடைய சிறுவன் காயமடைந்த நிலையில் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என ரத்கம பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

காலி - கொழும்பு பிரதான வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பட்டம் ஒன்றில் இருந்த நைலோன் நூல் வீதி பக்கத்தில் காணப்பட்டதால் அதனைக் கையில் எடுத்து அங்கிருந்து நீக்க முயற்சித்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநருக்கு அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளது. இதனால் மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் தனது குடும்பத்திருடன் பெற்றோரை பார்ப்பதற்காக பயணித்த சந்தர்ப்பத்தில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் 34 வயதுடைய தாய் மற்றும் ஒன்றரை வயதுடைய குழந்தையே உயிரிழந்துள்ளனர்.

# 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கண்டியில் நேற்று முதல் தடுப்பூசி

கண்டி மாவட்டத்தில் உள்ள 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் தடுப்பூசி செலுத்தப்படுகின்றது.

அவர்களுக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள் செலுத்தப்படுகின்றன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக 6 லட்சத்து 25 ஆயிரம் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள் கண்டி மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

எனவே பொதுமக்கள் எவ்வித பயமுமின்றி தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சுமந்திரன் விதித்த நிபந்தனை

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கெடுபிடியான, எதேச்சதிகார ஆட்சியின் கீழ் நாட்டில் ஜனநாயகம், மனித உரிமைகள் போன்றவை பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றன.

ஆட்சிமுறைமையே இராணுவமயப்படுத்தப்படுவதால் சட்டத்தின் ஆட்சி கேள்விக்குரியதாகி வருவது கண்கூடு.

2015 இற்கு முன்னர் இடம்பெற்ற 'இருண்ட ஆட்சி' மீண்டும் கால்பதிக்கத் தொடங்கியிருக்கின்றது.

ஜனநாயகத்தை மீட்டு, மனித உரிமைகளைப் பாதுகாத்து, சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கான முயற்சிகள் – 2014 இல் நடைபெற்றமை போல – ஏழு ஆண்டுகள் கழித்து மீண்டும் துளிர்விட்டிருக்கின்றன.

அதற்கான கூட்டம் ஒன்றை 'நியாயமான சமூகத்திற்கான தேசிய இயக்கம்' கொழும்பில் நேற்று முன்தினம் நடத்தியிருக்கின்றது.

எல்லோராலும் பெரிதும் மதிக்கப்படுகின்ற மூத்த அரசியல்வாதியும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரியாவின் ஏற்பாட்டில் இந்தக் கூட்டம் நடைபெற்றிருக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மனோ கணேசன் எம்.பி. மற்றும் ஜே.வி.பி. பிரதிநிதிகளும் கூட இந்தக் கூட்டத்தில் பங்கு கொண்டனர். இலங்கைத் தமிழரசு சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராசாவும், அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொண்டனர்.

அங்கு கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாஸ ஆகியோரை அடுத்து மூன்றாவதாகப் பேசிய சுமந்திரன் ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

2015 இற்கு முந்திய இருண்ட ஆட்சி, இப்போது போன்ற ஒரு கொரூர நிலைமையை நோக்கி நகர்ந்தபோது அதிலிருந்து நாட்டை மீட்டு, மனித உரிமைகளை நிலைநாட்டும் விதத்தில் சட்டத்தின் ஆட்சியைக் கொண்டு வரும் இலக்கோடு ஒரு புதிய இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார் மறைந்த மாதுலுவாவே சோபித தேரர். சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவரான அவர், 2013இல் இதற்கான முதல் கூட்டத்தைக் கூட்டிய போது அதில் பத்துக்கும் குறைவான பிரமுகர்களே பங்குபற்றினர்.

அன்றைய முதல் கூட்டத்தில் தாமும் பங்குபற்றியமை நினைவூட்டிய சுமந்திரன் அந்த இயக்கமே பின்னர் 2015 ஜனவரியில் ராஜபக்ஷக்களின் இருண்ட ஆட்சிக்கு முடிவு கட்ட வழி கோலியது என்பதையும் சுட்டிக்காட்டினார். அந்த இயக்கம் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊழலுக்கு எதிராகக் கிளர்ந்து ஆட்சி மாற்றத்துக்கான பாதையைத் திறந்து விட்டது. அந்த மாற்றத்தில் தமிழர்கள் பெரும் பங்கு வகித்தனர் என்பதைக் குறிப்பிட்டார் சுமந்திரன்.

இலங்கையில் ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் நிலைநாட்டி, சட்டத்தின் ஆட்சி மலர்வதற்குக் காலத்துக்குக் காலம் தமிழர்கள் ஆற்றி வந்த பணியை அவர் விவரித்தார்.

எழுபதுகளின் ஆரம்பத்தில் சிறிமாவின் ஆட்சிக் காலத்தில் சிங்கள இளைஞர்கள் வகை தொகையின்றி, சட்ட முறையற்ற விதத்தில் கொன்றொழிக்கப்பட்டபோது தமிழர்களே அந்த சிங்கள இளைஞர்களுக்காகவும் குரல் எழுப்பினர்.

பின்னர் சிறிமா அரசு சரிந்து, ஜே.ஆர். நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகி, ஜனநாயகம் மீண்டும் கேள்விக்குறியாக்கப்பட்ட போதும் தமிழர்களே அப்போதும் குரல் எழுப்பினர். சிறிமாவோவின் குடியுரிமையைப் பறித்து, நாடாளுமன்றுக்குள் வைத்தே சிறிமாவோவை ஆளும் தரப்பினர் தாக்க முற்பட்டபோது அவருக்குப் பாதுகாப்பு அரணாக நின்று, பாதுகாத்து, வெளியே கொண்டு வந்தவர்கள் தமிழ் எம்.பிக்களே என்று சுட்டிக்காட்டிய சுமந்திரன், 2015 இல் ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்பியதிலும் ஒன்றுபட்டு நின்ற தமிழர்களின் சக்திதான் பிரதான காரணமாயிற்று என்பதையும் தெளிவுபடுத்தினார்.

தென்னிலங்கையில் அரசியல் பிழைக்கும்போதெல்லாம் அதனை நேர்சீர் செய்வதில் தமிழர்கள் தங்கள் முழுப் பங்களிப்பை வழங்கி வந்தனர். தமிழர்களின் அந்த ஒத்துழைப்பை முழுமையாகப் பயன்படுத்தும் தென்னிலங்கை, தமிழர்களின் நீண்ட காலத் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் அவ்வப்போது வாக்குறுதிகள் தந்து ஏமாற்றியமையைத் தவிர வேறு எதனையும் செய்யவில்லை என்பதை அந்தக் கூட்டத்தில் அப்பட்டமாக – பெரும் குற்றச்சாட்டாக – முன்வைத்தார்.

2014 இல் ஆட்சி மாற்ற முயற்சியில் தமிழர்களும் சேர்ந்து முழுமும்முரமாக ஒத்துழைத்த போதும் வாக்குறுதி தந்தீர்கள், வெளிப்படையாகப் வேசுவதைத் தவிர்ப்போம் என்றீர்கள், ஆட்சி மாறியதும் எம்மை – தமிழர்களை – நட்டாற்றில் விட்டீர்கள். அது இம்முறையும் தொடரமுடியாது. முப்பது வருட கோர யுத்தத்தைதத் தந்த தேசிய இனப்பிரச்சினை இது. புலிகளை அடக்கியதால், இப்பிரச்சினை தீர்ந்து விட்டது என்பதல்ல. தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கான நியாயத் தீர்வையும் உள்ளடக்கியதான – வெளிப்படையாக அதைப் பேசி உறுதிப்படுத்துகின்ற – ஒரு நடவடிக்கைத் திட்டத்துக்குத்தான் இனித் தமிழர்கள் ஆதரவு தருவார்கள், தரமுடியும் என்று அக்கூட்டத்தில் நிபந்தனை விதித்திருக்கின்றார் சுமந்திரன்.

சிங்களத்தின் பதில் என்ன என்பதில்தான் இவ்விடயத்தில் தமிழர்களின் செயற்போக்கு அமையும் என நம்பலாம்.

# ஒரு லட்சத்து 80 ஆயிரம் இராணுவத்தினரில் 60 ஆயிரம் பேருக்கே தடுப்பூசி போடப்பட்டது

## இராணுவத் தளபதி தகவல்



இலங்கை ஆயுதப்படைகளில் சுமார் ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேரில், இதுவரை 60 ஆயிரம் பேர் மட்டுமே தடுப்பூசி பெற்றுள்ளனர் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கொவிட் - 19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் அமர்வு கடந்த 15 ஆம் திகதி பிற்பகல் நடைபெற்றது.

பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியும் கொவிட் - 19 பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விடே வைத்திய நிபுணர் அசேல குணவர்தன ஆகியோர் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது கொவிட் - 19 பரவல் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கமளித்த ஜெனரல் சவேந்திர சில்வா, தேசிய தடுப்பூசி ஏற்றல் செயற்றிட்டம், நாளாந்தம் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,400 - 1,500 வரையில் காணப்படுகின்றமை, இறப்பு வீதம் 35 - 40 வீதமாக காணப்படுகின்றமை, ஒரு சில கிராம சேவகர் பிரிவுகள் மட்டும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை, மன்னாரை மையப்படுத்திய தடுப்பூசி வழங்கும் திட்டம் என்பன தொடர்பில் விளக்கமளித்தார்.

ஓகஸ்ட் மாத இறுதிக்குள் முதற் தொகுதி தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்த்திருப்பதோடு, ஏற்றுமதி ஊக்குவிப்பு சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் அதேவேளை தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர்கள், 30 வயதுக்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு தடுப்பூசிகளை வழங்கும் வேலைத்திட்டத்தையும் இராணுவம் முன்னெடுத்து வருகிறது.

'நாங்கள் தேசிய தடுப்பூசி செயற்பாட்டுக்காக அர்ப்பணித்துள்ளோம்' ஆனால் எங்கள் ஆயுதப்படைகளில் சுமார் ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேரில், இதுவரை 60 ஆயிரம் பேர் மட்டுமே தடுப்பூசி பெற்றுள்ளனர், இருப்பினும் தங்களது உயிர் அச்சுறுத்தல்களை பொருட்படுத்தாமல், நோயாளர்களை காவிச் செல்லும் இயந்திரங்களை இராணுவ வீரர்கள் தள்ளிச் செல்கிறார்கள், எங்கள் இராணுவ வீரர்களால் இதுவரை 1,001 கொவிட் - 19 நோயாளிகளின் பூதவுடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

அதனையடுத்து வெளிநாடுகளில் இருந்து அழைத்து வரப்படுவோர் மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கை பற்றிய புதிய போக்குகள் தொடர்பிலும் அவர் விளக்கமளித்தார். மேற்படி இரு தரப்பினருக்கும் மேற்கொள்ளப்படுகின்ற பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் 24 மணித்தியாலங்களுக்குள் கிடைக்கப்பெறும் எனவும் தளபதி தெரிவித்தார்.

சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன, தலைமை தொற்று நோயியல் நிபுணர் சமித கினிகே ஆகியோரால் தொழில்நுட்ப ரீதியான தரவுகளும் வழங்கப்பட்டன.

# நீர்கொழும்பு கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் உத்தரவாதம்



நீர்கொழும்பு, முன்னக்கர விவகாரத்திற்கு விரைவில் நியாயமான தீர்வு காணப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்புக்கான விஜயத்தை கடந்த சனிக்கிழமை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர், முன்னக்கர எனப்படும் கிள்ளடித் தோட்ட மைதானம் மற்றும் களப்பு அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுப்பதில் காணப்படும் நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பாக நேரடியாக ஆராய்ந்தார்.

இதன் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் உறுதியளிக்கப்பட்டது.

இலங்கையின் நீளமான களப்பாக காணப்படும் நீர்கொழும்பு களப்பை நம்பி சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் சுமார் 100 கோடி ரூபா செலவில் குறித்த களப்பை அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், முன்னக்கர என்று அழைக்கப்படும் கிள்ளடித் தோட்டப் பகுதியில் அமைந்திருக்கும் விளையாட்டு மைதானக் காணி, வனப் பாதுகாப்புத் திணைக்களத்தால் உரிமை கோரப்பட்டு வருகின்ற நிலையில், பிரதேச மக்களுக்கும் வனப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இடையில் அசாதாரண சூழல் காணப்படுவதுடன் களப்பு அபிவிருத்திப் பணிகளுக்கும் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளன.

இந்நிலையில், குறித்த விவகாரங்களை நேரடியாக ஆராய்வதற்காக நீர்கொழும்புக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதேச மக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியமையுடன், இந்த விவகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமருடனும் கலந்துரையாடி நியாயமான தீர்வைப் பெற்றுத் தருகிறேன் எனவும் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 14 மற்றும் 12 வயது மகள்களை கர்ப்பமாக்கிய குரூரமான தந்தை!

பதுளை, எல்ல தெமோதர பகுதியில் தந்தை ஒருவர் தனது இரு மகள்களையும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதில் இருவரும் கர்ப்பமுற்று இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

14 மற்றும் 12 வயதான மகள்களையே குறித்த 37 வயதுடைய தந்தை கர்ப்பமாக்கி உள்ளார்.

14 வயதுடைய மகளை வயிற்று வலி காரணமாக அவருடைய தாய் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற சந்தர்ப்பத்தில் அவர் கர்ப்பமுற்று இருக்கின்றமை தெரியவந்துள்ளது. இதன்போது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தனது தந்தையால் இவ்வாறு கர்ப்பமுற்று இருப்பது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த சிறுமியின் இளைய சகோதரியையும் மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்திய போது அவரும் கர்ப்பமுற்று இருக்கின்றமை தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய தந்தை தலைமறைவாகி உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

அங்கம் 18

ஒரு பத்திரிகையில் பத்திரிகை ஆசிரியனின் பங்களிப்பு, நிர்வாகத்தின் செல்வாக்குப் பற்றி எல்லாம் சிவநாயகம் ஐயா எனக்குத் தெளிவுபடுத்தினார்.

அப்போது எனக்கு வயது 22தான். பத்திரிகைத் துறையில் என் பட்டறிவு ஆக மூன்று வருடங்கள். அந்த நிறுவனத்தில் நான் நிரந்தரச் செய்தியாளர் கூட இல்லை. **Freelance Reporter** தான். சம்பளம் கூட பிரசுரமாகும் செய்தியின் வரிக் கணக்குப்படிதான்.

அந்த அடிப்படையில் சம்பளம் கணக்கிடப்பட்டதால் – சராசரி செய்தியாளர்களை விடவும் அதிக இடங்களை எனது செய்திகள் பிடித்துக் கொண்டமையால் – அன்றைய நிலையில் என் வேதனம் அதிகமாக இருந்தது.

நிறுவனக் கணக்குப் பிரிவைப் பொறுத்தவரை இது இரண்டு விடயங்களில் கவனிப்புக்குள்ளாகியது. ஆங்கிலப் பத்திரிகை '**Sun**' இனதும், சிங்கள் நாளிதழ் 'தவஸ' வினதும் ஏனைய **Freelance Reporter** களை விட எனது மாத வேதனம் அதிகமாக இருந்தது. அதுவும் எமது பத்திரிகையின் செய்தியாளர்கள், உதவி ஆசிரியர்கள், செய்தி ஆசிரியர்களை விடவும் சில மாதங்களில் எனது வேதனம் அதிகமாக இருந்தது.

ஒரு தடவை பண்டிகையை ஒட்டி ஒன்றரைமாத வேதனம் போனஸ் ஆகக் கொடுத்தார்கள். எனது அந்த வருடத்துக்கான சராசரி ஒன்றரை மாதச் சம்பளம், ஏறத்தாழ செய்தி ஆசிரியரின் தொகையை ஒட்டி வந்தது.

அதனால், என்னை **Freelance Reporter** பதவியிலிருந்து நிரந்தரச் செய்தியாளராக்கி, நிரந்தர மாத வேதனம் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்ற ஒரு பரிந்துரை ஆளணி முகாமையாளரிடமிருந்து பத்திரிகை ஆசிரியருக்கு வந்திருந்தது என அறிந்தேன். சிவநாயகம் ஐயாவே மேலோட்டமாக அதைச் சொன்னார்.

*"நீர் சட்டக் கல்லூரியின் முழுநேர மாணவன் என்பதால் உம்மை நிரந்தர ஊழியராக்க முடியாது என்று ஆளணி முகாமையாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளேன். உம்மைக் கேட்டாலும் அப்படியே கூறும்."* என்று ஐயா சொன்னார் என எனக்கு நினைப்பு.

இதில் இரண்டு விடயங்களை உணர்ந்து கொண்டேன்.

ஒன்று – என்னைத் 'தினபதி', 'சிந்தாமணி' அலுவலகத்தில் நிரந்தர செய்தியாளனாகவோ அல்லது உதவி ஆசிரியனாகவோ மாற்றும் எண்ணம் ஐயாவுக்கு இருக்கவில்லை.

அடுத்தது – ஒரு சட்டத்தரணியானாலும் கூட, பத்திரிகைத் துறையில் தன்னிடம் கற்று இங்கிருந்து வெளியேறுவதுதான் எனக்குப் பொருத்தமானது என்பதை அவர் நேரத்துடன் கணக்கிட்டிருந்தார் என்பது.

அதைக் குறிப்பதற்காக இன்னொரு கட்டுரையின் ஒரு பகுதியை நான் தொடவேண்டியிருக்கின்றது.

அக்கட்டுரையை வரைந்தவர் 'உதயன்' பத்திரிகையின் வார வெளியீடான 'சஞ்சீவி' யினதும், சிறுவர் இதழான 'அருச்சுனா' வினதும் ஆசிரியராக இருந்த மூத்த பத்திரிகையாளர் வே. வரதசுந்தரம் அவர்கள்.

அவர் எனது மைத்துனர். அவரது தாயார், அவரது மனைவியின் தந்தையார், எனது தந்தையார் மூவரும் சொந்தச் சகோதரங்கள்.

வே.வரதசுந்தரம் அவர்கள் பத்திரிகைத் துறையிலும், சட்டக் கல்வியிலும் நான் இறங்க வழிகாட்டியவர். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் நிறைந்த புலமையாளர். சிவநாயகம் ஐயா போல சாயி பக்தர். சிவநாயகம் ஐயாவின் 'தினபதி' பண்ணையில் எங்களுக்கு முந்திய தசாப்தத்தில் புடம் போடப்பட்டவர். 'த ஐலண்ட்' பத்திரிகை நிருபராக இருந்து பல புகழ்பெற்ற வழக்குகள் தொடர்பான செய்திகளைப் பரபரப்பாகத் தந்தவர். இன்றும் திருகோணமலையில் ஆங்கிலக் கல்விப் போதனையில் புகழ்பூத்த ஆசிரியராக விளங்குகிறார்.

அவரும், அவரது மகன் செந்தூரனும் நடத்தும் 'ஓம் லங்கா' (**www.oml Lanka.net**) ஆங்கில செய்தி இணையம் இலங்கையிலும் சர்வதேசத்திலும் அதன் தரமான செய்திகளுக்காகவும், தகவல்களுக்காகவும் பெரிதும் மதிக்கப்படுவது. அதில் சிவநாயகம் ஐயாவின் நூற்றாண்டை ஒட்டி நினைவுக் கட்டுரை வரைந்திருக்கின்றார் வே. வரதசுந்தரம்.

அவரின் மனைவியின் தந்தையார்தான் சிவசுப்பிரமணியம். அவருக்கு மாமா. எனக்கும் பெரியப்பா. என் தந்தையின் தமையனார்.

இந்த சிவசுப்பிரமணியம்தான் ஒரு நூலைத் தந்து இளைஞனான தனக்கு சுப்பிரமணிய பாரதியாரை, அறிமுகப்படுத்தியவர் என சிவநாயகம் ஐயா தனது 'நான் கண்ட பாரதி' கட்டுரைத் தொடரில் விவரித்திருக்கின்றார் என ஏற்கனவே நான் குறிப்பிட்டிருந்தேன். அது வாசகர்களுக்கு நினைவில் இருக்கும்.

சிவநாயகம் ஐயா பற்றிய தமது நினைவுக் கட்டுரையில், தமது மாமனார் சிவசுப்பிரமணியம் 'தினபதி' அலுவலகத்தில் சிவநாயகம் ஐயாவை சந்தித்தமை பற்றி வரதசுந்திரம் ஆங்கிலத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:–



ஐம்பதுகளின் நடுப்பகுதியில்
ஸி.என்.அண்ணாத்துரை கொழும்பு வந்த சமயம்
தமது நண்பரான 'சுதந்திரன்' ஆசிரியர்
எஸ்.டி.சிவநாயகத்துடன்.

*பல தசாப்தங்களுக்கு முன்னர் 'தினபதி' அலுவலகத்தில் அவர் (எஸ்.டி.சிவநாயகம்) தம்மைச் சந்தித்த எனது பெரியமாமா (சிவசுப்பிரமணியம்) அவர்களிடம் கூறிய விடயம் எனக்கு இன்னும் தெளிவாக ஞாபகம் இருக்கின்றது.*

*"அண்ணன் உங்கள் சகோதரர் நடேசபிள்ளை அண்ணனிடம் சொல்லுங்கள். அவரின் மகன் வித்தியாதரன் இங்கு எங்களுடன் பணிபுரிகின்றார். அவர் தன் எழுத்தின் மூலம் பத்திரிகைத்துறையில் பிரகாசித்துத் துலங்கி, மூத்த பத்திரிகையாளராக முகிழ்ந்து தந்தையாருக்குப் பெருமை சேர்ப்பார். அதற்கான தனிச் சிறப்பு* ***(Hallmark)*** *அவரிடம் தாராளமாக உண்டு." என்றார் சிவநாயகம். இதைக் கேட்டதும் பெரியமாமா புளகாங்கிதம் அடைந்தார். வழமைபோல தமது மகிழ்வை அனுபவிப்பதற்காக 'தினபதி' அலுவலகப் படிகளில் இறங்கி வரும்போது தமக்குப் பிடித்த 'நெவிகட்' சிகரெட் ஒன்றை அவர் ஆழமாக இழுத்துப் புகைவிட்டார். இன்று, வித்தியாதரன் தனது திறமையை நிரூபித்து நிற்கின்றார். சிவநாயகம் ஐயாவுக்கு என்னே தொலைநோக்குப் பார்வை இருந்தது...!*

– இப்படி வியந்திருக்கின்றார். வரதசுந்தரம். சிவநாயகம் ஐயா பற்றிய அந்தக் கட்டுரையை இன்னும் அந்த **omlanka.net** இணையத்தில் ஆங்கிலத்தில் நீங்கள் பார்க்கலாம்.

இது, என்னைப் பற்றிய புகழாரத்துக்காக குறிப்பிடப்படும் விடயமல்ல.

முதலாவது – ஊடகத்துறை பற்றிய சிவநாயகம் ஐயாவின் தீர்க்கதரிசனம் பற்றிய ஓர் உரைகல்லுக்காக.

அடுத்தது – இருப்பத்தியிரண்டு வயது இளைஞனான எனக்கு – அதுவும் தமது பத்திரிகையின் நிரந்தர, அலுவலகச் செய்தியாளனாகக் கூட இல்லாத எனக்கு – அவர் பத்திரிகைத்துறை சார்ந்த அந்த 'கீதா உபதேசத்தை' மினக்கெட்டு ஏன் செய்தார் என்ற புரிதலை வாசகர்களுக்கு ஏற்படுத்தவே இவற்றைக் குறிப்பிட்டேன்.

இனி, விடயத்துக்கு வருகிறேன்.

சிங்களக் கம்பனியின் வெளியீடான 'தினபதி'யில் தமிழ்த் தேசிய எழுச்சி குறித்து, அதுவும் தமிழர்களின் ஆயுத விடுதலைப் போராட்டத்தை உசுப்பி விடுகின்ற மாதிரியான தலைப்புகளையோ, செய்திகளையோ பிரசுரிப்பது எவ்வளவு நெருக்கடியானது என்பதை சிவநாயகம் ஐயா தெளிவுபடுத்தினார்.

தலைப்பு அல்ல, செய்தி – தகவல் – வாசகர்களை எட்டுவதுதான் முக்கியம். தலைப்புதீர்ப்புக்குத் தலைவணங்குகிறேன் எனக் குட்டிமணி கூறுவதாக இருந்தாலும், உங்கள் செய்தியின் ஒரு வரி கூட விடப்படாமல் பிரசுரமாகியுள்ளது. புறூவ் நிலையில் உங்கள் மூலச் செய்தியையும் வாசித்தேன். முழு விடயங்களும் அப்படியே உள்ளன. – என்றார் அவர்.

ஒரு பத்திரிகையை நடத்துவதில் உள்ள நெருக்கடிகளை எல்லாம் நேரம் எடுத்து அவர் தெளிவுபடுத்தினார்.

இது சிங்களக் கம்பனி என்பது ஒரு விடயம். ஆனால் நாளை திடீரென தணிக்கை நடைமுறைக்கு வரும். அப்போது எங்கள் மீது பல கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். வேறு வேறு வழிகளில் எல்லாம் அழுத்தங்கள், நெருக் கடிகள், பல வடிவங்களில் வரும். பத்திரிகையாளர்களாக நாம் அவற்றுக்கு முகம் கொடுக்க வேண்டி நேரும். அந்தக் கட்டுப்பாட்டுக்குள் சிக்கியவாறு எமது வாசகர்களுக்கு நாம் விடயத்தை எப்படியேனும் கொடுக்க வேண்டும். சில சமயங்களில் நேரில் பட்டவர்த்தனமாக சொற்களில் நறுக்குத் தெறித்துற்போல நாம் கொடுக்க முடியும். வேறு சில சமயங்களில் வசனங்களுக்கு இடையே – பிரசுரிக்கப்படாத சொற்களுக்கு மத்தியில் – நாம் எழுதாமல் குறிப்பால் வாசகர்களுக்கு உணர்த்த வேண்டும். அந்த வகையில் ஒன்றுதான் இந்தச் செய்தியும் என்று விவரித்தார் அவர். பல விடயங்கள் எனக்கு அப்போதே புரிந்தன. சில விடயங்கள் அப்போது புரியவில்லை. ஆனால் காலக்கிரமத்தில் உதயனில், யுத்த தரப்புகளுக்கு மத்தியில் செய்தியின் விளைவுகளுக்கான பொறுப்புக்குத் தனித்து முகம்கொடுக்கும் சித்திரவதைப் பணியை நானாக ஏற்று முன்னெடுத்த போது அவற்றில் பலவற்றை நேரடியாகப் புரிந்து கொண்டேன்.

ஒரு புறம் தங்களுக்குள் முரண்பட்டு நிற்கும் தமிழ் இயக்கங்கள். புலிகள், புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ் என்று தனித்தும் ஒன்று சேர்ந்தும் ஆயுதங்களுடன் ஆட்டிப் படைக்கும் அமைப்புகள். தங்களுக்குள் முரணிலை உச்சத்தில் மோதிக் கொண்டன.

மறுபுறம் பொலிஸ், இராணுவம், கடற்படை, விமானப்படை எனப் பல யமக்கிரகங்கள்.

போதாக்குறைக்கு இவை எல்லாவற்றும் நிகராக இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயரில் வந்திறங்கி, அமைதியையே குலைத்த இந்தியப் படைகளின் கைங்கரியங்கள்.

இவற்றுக்கு அப்பால் இலங்கை நீதித்துறை, நிர்வாகம், நீதிமன்றங்கள் என்ற கெடுபிடிகள்.

இவை, எல்லாவற்றுக்கும் மத்தியில் ஒரு பத்திரிகை இருபத்தியைந்து ஆண்டுகள் யுத்தங்கள் மலிந்த மரண பூமியில் தடையின்றி வெளிவருவதற்கு, இந்தத் தரப்புகள் எல்லாவற்றுக்கும் முகம் கொடுத்து மீளும் வல்லமையை – துணிவை – மனவலிமையை – நிஜநிலைமையைப் புரியும் வாய்ப்பை – சிவநாயகம் ஐயாவின் அன்றைய 'பேருண்மை விளக்கமே' எனக்கு முன்கூட்டியே தந்தது என்பேன்.

சிங்களக் கம்பனி நடத்தும் ஒரு தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியர் அவர். தமிழ்த் தேசியம் பேசும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராகக் காட்டமான நிலைப்பாட்டை எடுத்து விமர்சிப்பவர். நானோ ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர்களின் விடுதலை உணர்வை மதிக்கும் ஆக்ரோஷத்தில் நிற்கும் இளைஞன்.

என்னுடைய அந்த நிலைப்பாட்டை அவர் மறுதலித்தார் அல்லர். குறை சொல்லவும் இல்லை. நையாண்டி பண்ணவும் இல்லை.

என் தேசிய சிந்தனை எழுத்துக்கு 'தினபதி' பொருத்தமான இடம் அல்ல என்பது அவரது அந்த விளக்கத்துக்கு மத்தியில் தோன்றாப் பொருளாய்த் தொக்கி நின்றது. என்னை ஸ்திரப்படுத்தியதும், என் இறகு முளைத்ததும், நான் 'தினபதி' கூட்டை விட்டுப் பறக்க வேண்டியவன், புதுக் கூடு அமைக்க வேண்டியவன் என்ற உறுதியான நிலைப்பாடு அதில் இழையோடியமையை நான் உணராமல் உணர்ந்தேன்.

நாம் 'உதயன்', 'சஞ்சீவி' பத்திரிகைகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தபோது அதனை முழுமையாக ஆசீர்வதித்துத் தோன்றாய்த் துணையாக நின்று எம்மை அவர் வழிப்படுத்தியமை கூட அதனால்தான்.

தமது பிள்ளைகளின் பத்திரிகையாக 'உதயன்' நாளிதழை அவர் பார்த்தார். நாற்பதுகளின் கடைசியில் மட்டக்களப்பில் இருந்து தாம் வெளியிட்ட 'உதயன்' என்ற பத்திரிகைப் பெயரை நாம் சூட்டிக் கொண்டதும்கூட அவருக்குப் பெரு மகிழ்வு தந்தது. சிவநாயகம் தமது மூத்த மகனுக்கு விருப்பத்துடன் சூட்டிக் கொண்ட பெயர் 'உதயநாயகம்'.

சிவநாயகம் ஐயாவின் அன்றைய பக்கம் 11

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 8 | கணிதம் | அலகு 15

## தசமங்கள்

பின்னமொன்றை அதன் பகுதி எண் 10,100,1000,...... என்றவாறு பத்தின் வலுவாக மாற்றிக்கொண்டால் அப்பின்னத்தை தசம எண்ணாக மாற்றுவது இலகுவாக இருக்கும்.

**1. பின்வரும் பின்னங்களை தசம எண்ணாக மாற்றி எழுதுக**

1) $\frac{2}{10}$ = ..............
2) $\frac{3}{10}$ = ..............
3) $\frac{5}{10}$ = ..............
4) $\frac{7}{10}$ = ..............
5) $\frac{11}{10}$ = ..............
6) $\frac{15}{10}$ = ..............
7) $\frac{25}{10}$ = ..............
8) $\frac{37}{10}$ = ..............
9) $\frac{84}{10}$ = ..............
10) $\frac{99}{10}$ = ..............
11) $\frac{9}{10}$ = ..............
12) $\frac{96}{10}$ = ..............
13) $\frac{79}{10}$ = ..............
14) $\frac{89}{10}$ = ..............
15) $\frac{83}{10}$ = ..............

16) $\frac{2}{100}$ = ..............
17) $\frac{4}{100}$ = ..............
18) $\frac{23}{100}$ = ..............
19) $\frac{67}{100}$ = ..............
20) $\frac{98}{100}$ = ..............
21) $\frac{78}{100}$ = ..............
22) $\frac{164}{100}$ = ..............
23) $\frac{132}{100}$ = ..............
24) $\frac{478}{100}$ = ..............
25) $\frac{999}{100}$ = ..............
26) $\frac{89}{100}$ = ..............
27) $\frac{129}{100}$ = ..............
28) $\frac{239}{100}$ = ..............
29) $\frac{479}{100}$ = ..............
30) $\frac{719}{100}$ = ..............

31) $\frac{7}{1000}$ = ...........
32) $\frac{90}{1000}$ = ...........
33) $\frac{126}{1000}$ = ...........
34) $\frac{487}{1000}$ = ...........
35) $\frac{645}{1000}$ = ...........
36) $\frac{699}{1000}$ = ...........
37) $\frac{723}{1000}$ = ...........
38) $\frac{845}{1000}$ = ...........
39) $\frac{955}{1000}$ = ...........
40) $\frac{9999}{1000}$ = ...........
41) $\frac{249}{1000}$ = ...........
42) $\frac{6429}{1000}$ = ...........
43) $\frac{914}{1000}$ = ...........
44) $\frac{7269}{1000}$ = ...........
45) $\frac{1029}{1000}$ = ...........

**2. பகுதி எண் பத்தின் வலுக்களாக அமையாத பின்னங்களை தசம எண் களாக மாற்றுதல்**

உதாரணங்கள்: 1, 2, 3

$$\frac{2}{5} = \frac{(2 \times 2)}{(5 \times 2)} = \frac{4}{10} = 0.4$$

$$\frac{6}{25} = \frac{(6 \times 4)}{(25 \times 4)} = \frac{24}{100} = 0.24$$

$$\frac{16}{125} = \frac{(16 \times 8)}{(125 \times 8)} = \frac{128}{1000} = 0.128$$

1) $\frac{2}{5}$ = ..............
2) $\frac{3}{2}$ = ..............
3) $\frac{5}{50}$ = ..............
4) $\frac{7}{5}$ = ..............
5) $\frac{11}{2}$ = ..............
6) $\frac{20}{30}$ = ..............
7) $\frac{7}{5}$ = ..............
8) $\frac{5}{2}$ = ..............
9) $\frac{4}{5}$ = ..............
10) $\frac{9}{2}$ = ..............
11) $\frac{9}{5}$ = ..............
12) $\frac{96}{30}$ = ..............
13) $\frac{77}{70}$ = ..............
14) $\frac{99}{110}$ = ..............
15) $\frac{63}{30}$ = ..............

16) $\frac{2}{25}$ = ..............
17) $\frac{4}{20}$ = ..............
18) $\frac{23}{50}$ = ..............
19) $\frac{67}{25}$ = ..............
20) $\frac{98}{50}$ = ..............
21) $\frac{78}{20}$ = ..............
22) $\frac{164}{50}$ = ..............
23) $\frac{132}{25}$ = ..............
24) $\frac{78}{25}$ = ..............
25) $\frac{992}{50}$ = ..............
26) $\frac{89}{100}$ = ..............
27) $\frac{147}{20}$ = ..............
28) $\frac{339}{50}$ = ..............
29) $\frac{47}{50}$ = ..............
30) $\frac{19}{25}$ = ..............

31) $\frac{7}{500}$ = ..............
32) $\frac{90}{125}$ = ..............
33) $\frac{2}{125}$ = ..............
34) $\frac{487}{500}$ = ..............
35) $\frac{24}{125}$ = ..............
36) $\frac{69}{500}$ = ..............
37) $\frac{23}{125}$ = ..............
38) $\frac{45}{500}$ = ..............
39) $\frac{777}{1000}$ = ..............
40) $\frac{4836}{500}$ = ..............
41) $\frac{249}{125}$ = ..............
42) $\frac{4530}{500}$ = ..............
43) $\frac{914}{1000}$ = ..............
44) $\frac{26}{125}$ = ..............
45) $\frac{102}{500}$ = ..............

**3. கலப்பு எண்களை தசம எண்களாக மாற்றுவோம்**

உதாரணங்கள் - $2\frac{2}{5} = \frac{12}{5} = \frac{12 \times 2}{5 \times 2} = \frac{24}{10} = 2.4$

$$1\frac{2}{25} = \frac{27}{25} = \frac{27 \times 4}{25 \times 4} = \frac{108}{100} = 1.08$$

$$1\frac{7}{500} = \frac{507}{500} = \frac{507 \times 2}{500 \times 2} = \frac{1014}{1000} = 1.014$$

1) $2\frac{2}{5}$ =.......
2) $3\frac{3}{2}$ =.......
3) $4\frac{5}{50}$ =.......
4) $3\frac{7}{5}$ =.......
5) $2\frac{11}{2}$ =.......
6) $1\frac{20}{50}$ =.......
7) $2\frac{7}{5}$ =.......
8) $3\frac{5}{2}$ =.......
9) $4\frac{4}{5}$ =.......
10) $3\frac{9}{2}$ =.......
11) $1\frac{9}{5}$ =.......
12) $2\frac{6}{5}$ =.......
13) $3\frac{7}{10}$ =.......
14) $2\frac{9}{10}$ =.......
15) $4\frac{1}{5}$ =.......

16) $1\frac{2}{25}$ =.......
17) $2\frac{4}{20}$ =.......
18) $3\frac{23}{50}$ =.......
19) $2\frac{67}{25}$ =.......
20) $4\frac{98}{50}$ =.......
21) $3\frac{78}{20}$ =.......
22) $1\frac{164}{50}$ =.......
23) $2\frac{132}{25}$ =.......
24) $1\frac{7}{100}$ =.......
25) $4\frac{9}{20}$ =.......
26) $2\frac{8}{25}$ =.......
27) $1\frac{13}{50}$ =.......
28) $1\frac{39}{100}$ =.......
29) $2\frac{47}{50}$ =.......
30) $2\frac{19}{25}$ =.......

31) $1\frac{7}{500}$ =.......
32) $3\frac{90}{125}$ =.......
33) $5\frac{2}{8}$ =.......
34) $2\frac{487}{500}$ =.......
35) $3\frac{24}{125}$ =.......
36) $1\frac{69}{500}$ =.......
37) $1\frac{23}{125}$ =.......
38) $3\frac{45}{500}$ =.......
39) $1\frac{7}{500}$ =.......
40) $3\frac{3}{125}$ =.......
41) $4\frac{1}{100}$ =.......
42) $1\frac{23}{500}$ =.......
43) $1\frac{91}{2000}$ =.......
44) $3\frac{26}{125}$ =.......
45) $1\frac{102}{500}$ =.......

**4. தசம எண்களை பத்தின் வலுக்களால் பெருக்குதல்**

உதாரணங்கள் :
1. 1.5 x 10 = 15
2. 12.56 x 10 = 125.6
3. 1.52 x 100 = 152
4. 1.236 x 1000 = 1236

1) 152 x 10 = ............................
2) 15.2 x 10 = ..........................
3) 1.52 x 10 = ..........................
4) 2.52 x 10 = ..........................
5) 1.2 x 10 = ............................
6) 2.5 x 10 = ............................
7) 135.2 x 10 = ........................
8) 115.2 x 10 = ........................
9) 3.52 x 10 = ..........................
10) 4.252 x 10 = ......................
11) 7.512 x 100 = ......................
12) 71.2 x 100 = ........................
13) 19.52 x 100 = ......................
14) 125.1 x 100 = ......................
15) 5.184 x 100 = ......................

16) $1.52 \times 10^2$ = ....................
17) 15.2 x 100 = ....................
18) $0.152 \times 10^3$ = ....................
19) 24.32 x 100 = ..................
20) 72.11 x 100 = ..................
21) 15.20 x 1000 = ................
22) 1.252 x 1000 = ................
23) 152.1 x 1000 = ................
24) 1.2 x 1000 = ....................
25) 15.22 x 1000 = ................
26) 12.212 x 1000 = ..............
27) 15.2 x 1000 = ....................
28) 1.5 x 1000 = ......................
29) $7.21 \times 10^3$ = ......................
30) $1.344 \times 10^3$ = ....................

**5. முழு எண் ஒன்றை தசம எண்ணால் பெருக்குதல்**

உதாரணம் : - **முறை 1**

$$8 \times 0.7 = 8 \times \frac{7}{10} = \frac{56}{10} = 5.6$$

**முறை 2**

0.7 இன் தசம தானங்களைக் கருதாது 8 x 7 = 56 பெருக்க வேண்டும்.0.7 இல் ஒரு தசமதானம் மட்டும் இருப்பதால் விடையிலும் ஒரு தசமதானப்புள்ளி இருக்குமாறு தசமப்புள்ளியை இடவேண்டும்.

**8 x 0.7 = 5.6**

1) 1.52 x 2 = ............................
2) 15.2 x 5 = ..........................
3) 1.52 x 3 = ..........................
4) 2.52 x 7 = ..........................
5) 1.2 x 5 = ............................
6) 2.5 x 6 = ............................
7) 135.2 x 8 = ........................
8) 115.2 x 4 = ........................
9) 3.52 x 9 = ..........................
10) 4.252 x 7 = ......................
11) 7.512 x 2 = ........................
12) 71.2 x 8 = ..........................
13) 19.52 x 4 = ........................
14) 125.1 x 5 = ........................
15) 5.184 x 2= ........................

16) 1.52 x 11 = ......................
17) 15.2 x 15 = ......................
18) 0.152 x 12 = ....................
19) 24.32 x 30 = ....................
20) 72.11 x 32 = ....................
21) 15.20 x 34 = ....................
22) 1.252 x 24 = ....................
23) 152.1 x 26 = ....................
24) 1.2 x 40 = ........................
25) 15.22 x 43 = ....................
26) 12.212 x 28 = ..................
27) 15.2 x 32 = ......................
28) 1.5 x 14 = ........................
29) 7.21 x 26 = ......................
30) 1.344 x 11 = ....................

(மிகுதி நாளை.....)

ஆக்கம் - தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை)
யா /செங்குந்த இந்துக் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் : திரு ஞானமணி இரத்தினசிங்கம்
(ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா / தேசிய கல்வியியற் கல்லூரி

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021


**தரம் - 6** | **கணிதம்** | **அலகு 13**

### தசமம்


1.பின்வரும் தசமதான எண்களை சொற்களில் எழுதுக
1) 24.62 – இருபத்துநான்கு தசம் ஆறு இரண்டு
2) 345.05 – முந்நூற்று நாற்பத்தைந்து தசம் பூச்சியம் ஐந்து
3) 45.2 – நாற்பத்தைந்து தசம் இரண்டு
4) 7005.23 – ஏழாயிரத்து ஐந்து தசம் இரண்டு மூன்று
5) 8940.09 – எண்ணாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது தசம் பூச்சியம் ஒன்பது
6) 25.74 – இருபத்தைந்து தசம் ஏழு நான்கு
7) 59.64 – ஐம்பத்தொன்பது தசம் ஆறு நான்கு
8) 589.58 – ஐந்நூற்று எண்பத்தொன்பது தசம் ஐந்து எட்டு
9) 864.15 – எண்ணூற்று அறுபத்து நான்கு தசம் ஒன்று ஐந்து
10) 856.09 – எண்ணூற்று ஐம்பத்தாறு தசம் பூச்சியம் ஒன்பது

2.பின்வரும் தசமதான எண்களை எண்சட்டத்தில் குறிக்குக


**1) 65.74**





**2) 60.02**





**3) 34.85**





**4) 24.87**





**5) 5.26**





**6) 19.54**





**7) 54.84**





**8) 27.08**




**9) 24.04**




**10) 8.05**




3.கீழே உள்ள அட்டவணையை நிரப்புக.

| தசமதான எண்கள் | குறிக்கப்பட்ட இலக்கம் | இடப்பெறுமானம் | பெறுமானம் |
|---|---|---|---|
| 548.24 | 2 | **முதலாம் தசமதானம்** | **0.2** |
| 602.75 | **7** | **முதலாம் தசமதானம்** | **0.7** |
| 864.02 | 2 | **இரண்டாம் தசமதானம்** | **0.02** |
| 623.07 | **7** | **இரண்டாம் தசமதானம்** | **0.07** |
| 63.24 | 2 | **முதலாம் தசமதானம்** | **0.2** |

4.பின்வரும் தசம எண்களை <, >, = பொருத்தமான குறியீடுகளை இடுக
1) 0.8 > 0.7
2) 0.84 > 0.35
3) 0.56 < 0.6
4) 0.4 < 0.68
5) 0.25 < 0.29
6) 0.5 = 0.50
7) 0.48 > 0.38
8) 0.65 > 0.56
9) 0.1 = 0.10
10) 8.65 < 8.68

5.பின்வரும் தசம எண்களை ஏறுவரிசையில் எழுதுக
1) 0.8, 0.45, 0.64, 0.05, 0.5
0.05, 0.45, 0.5, 0.64, 0.8
2) 0.78, 0.48, 0.79, 0.45, 0.9
0.45, 0.48, 0.78, 0.79, 0.9

6.பின்வரும் தசமதான எண்களை கூட்டல்
1) 0.7 + 0.2 = 0.9
2) 0.64 + 0.47 = 1.11
3) 4.65 + 5.7 = 10.35
4) 8.04 + 3.47 = 11.51
5) 8.08 + 6.2 = 14.28
6) 5.4 + 4.8 = 10.2
7) 4.05 + 2.4 = 6.45
8) 6.84 + 6.09 = 12.93
9) 8.08 + 3.47 = 11.55
10) 8.64 + 9.78 = 18.42

7.பின்வரும் வசனபிரசினத்தில் உள்ள தசமதான எண்களை கூட்டுக.
1) ஆரம்பத்தில் இருந்த நீரின் பங்கு = 0.45
சேர்க்கப்பட்ட நீரின் பங்கு = 0.32
தற்போது உள்ள நீரின் பங்கு = 0.45 + 0.32
= 0.77

2) பயிரப்பட்ட பயிற்றம் விதை பங்கு = 0.28
பயிரப்பட்ட உழுத்தம் விதை பங்கு = 0.5
வயலில் பயிரப்பட்ட மொத்த பங்கு = 0.28 + 0.5
= 0.78

3) ஆண் மாணவர்களின் எண்ணிக்கை = 0.2
பெண் மாணவர்களின் எண்ணிக்கை = 0.4
மொத்த மாணவர்களின் எண்ணிக்கை = 0.2 + 0.4
= 0.6

8.பின்வரும் தசமதான எண்களின் கழித்தல்
1) 8.6 - 4.8 = 3.8
2) 3.45 - 2.08 = 1.37
3) 5.7 - 4.07 = 1.63
4) 0.84 - 0.5 = 0.34
5) 8.47 - 7.84 = 0.63
6) 5.74 - 5.31 = 0.43
7) 4.48 - 2.75 = 1.73
8) 8.74 - 5.68 = 3.06
9) 6.58 - 2.09 = 4.49
10) 5.65 - 4.68 = 0.97

9.பின்வரும் வசனப்பிரசினத்தில் உள்ள தசமதான எண்களை கழித்தல்
1) ஆரம்பத்தில் உள்ள சம்பளத்தில் பணம் = 0.85
கல்விக்காக செலவு செய்த பணம் = 0.38
தற்போது உள்ள பணம் = 0.85 - 0.38
= 0.47
2) ஆரம்பத்தில் உள்ள நீரின் அளவு = 0.75
திறந்துவிடப்பட்ட நீரின் அளவு = 0.39
தற்போது உள்ள நீரின் அளவு = 0.75 - 0.39
=0.36
3) மொத்த மாணவர்களின் எண்ணிக்கை = 0.8
பெண் மாணவர்களின் எண்ணிக்கை = 0.53
ஆண் மாணவர்களின் எண்ணிக்கை = 0.8 - 0.53
= 0.23

**ஆக்கம் : திரு. சற்குணராசா செந்தூரன்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்**
**யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திருமதி. சுதர்சினி விக்னமோகன்**
**விரிவுரையாளர், யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

## மிளகாய் செய்கையில் ராணுவத்துக்கு வெற்றி!

அரசாங்கத்தின் 'சௌபாக்ய தெக்ம' கொள்கைத் திட்டத்தின் கீழ் இலங்கை இராணுவத்தின் விவசாய மற்றும் கால்நடை பணியகத்தால் இராணுவத் தளபதியின் நாட்டை செழிப்பூட்டுவதற்கான 'துரு மித்துரு நவ ரட்டக்' நடுகை திட்டத்தை மையப்படுத்தி வவுனியா கந்தகாடு மெனிங் பண்ணை மற்றும் ஆண்டியபுலியன்குளம் இராணுவப் பண்ணை உள்ளடக்கிய 200 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட உலர்ந்த மிளகாய் செய்கை வெற்றியளித்துள்ளது.

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அது சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சால் அனுதிக்கப்பட்ட 7.9 கோடி ரூபா நிதியைக் கொண்டு கடந்த வருடத்தின் மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட மிளகாய் பயிர் செய்கை, பயிர் செய்கைக்கு தகுந்த வகையில் வரம்புகளை அமைத்தல் போன்ற திட்டங்கள் இலங்கை இராணுவத்தின் விவசாய மற்றும் கால்நடை பணியகத்துக்குப் பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் அறிவுரைக்கமைய ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

மேற்படி திட்டத்தின் கீழ் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் அறுவடையின் அடையாளமாக கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அது சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சாணக்க வக்கும்புரவை ஆண்டிய புலியங்குளத்துக்கு அழைப்பித்து ஒரு கிலோவுக்கு 300 ரூபா என்ற அடிப்படையில் இலங்கை இராணுவ விவசாய மற்றும் கால்நடை பணியகத்தின் பணிப்பாளர் பிரிகேடியர் அரோஸ் ராஜபக்ஷவால் வழங்கி வைக்கப்பட்டது.

மதவாச்சி – மன்னார் வீதியில் ஆண்டியபுலியங்குளம் 50 ஏக்கர் விவசாய நிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மிளகாய் தொகை 'சதொச' மற்றும் கூட்டுறவு முகவர் நிலையங்கள் ஊடாக பொது மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. தற்போது, கந்தகாட்டில் (100 ஏக்கர்), மெனிங் பண்ணையில் (50 ஏக்கர்) மற்றும் ஆண்டியங்குளத்தில் (50 ஏக்கர்) நிலப்பரப்புக்களில் காணப்ப டும் விவசாய நிலங்களில் மேற்கொள்ளப் பட்ட மிளகாய் செய்கைகளிலிருந்து கிடைக்கும் மிளகாய்களை சேகரிக்கும் பணிகளை இராணுவ விவசாய மற்றும் கால்நடை பணிப்பகம் ஆரம்பிக்கவுள்ளது. மேற்படி உற்பத்திகளை கொள்வனவு செய்யும் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர், அமைச்சரின் பிரதிநிதிள், விவசாய மற்றும் கால்நடை பணிப்பகத்தின் அதிகாரிகள் சிலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## ஒரு லட்சத்து 67 ஆயிரத்து 462 பேருக்கு நேற்றுமுன்தினம் கொரோனாத் தடுப்பூசி

நாட்டில் நேற்று மாத்திரம் மேலும் ஒரு லட்சத்து 67 ஆயிரத்து 462 பேருக்கு கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

குறிப்பாக கடந்த சனிக்கிழமை ஒரு லட்சத்து 54 ஆயிரத்து 962 பேருக்கு சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் 11 ஆயிரத்து 540 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இதுவரை 3 லட்சத்து 85 ஆயிரத்து 885 பேருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை ஒரு லட்சத்து 57 ஆயிரத்து 368 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் 14 ஆயிரத்து 464 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, சனிக்கிழமை 960 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ள நிலையில், இதுவரை 46 ஆயிரத்து 753 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 70

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



**214. பஸில் ராஜபக்ஷவை தமிழ் தரப்புக்கள் அவர் அமெரிக்காவில் நின்றபோது சந்தித்தன எனச் செய்திகள் வருகின்றனவே?**

அப்படியான செய்திகள் வருகின்றன. றோய் சமாதானம் என்பவர் அவை பற்றி ஓர் ஊடக சந்திப்பில் அறிவித்திருக்கின்றார். அவர் மனித உரிமை மீறல்களுக்காக கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுத்தவர். இந்தப் பேச்சு வார்த்தைகளுக்குப் பின் கூட்டணியினர் ஓரிரண்டு அமைச்சுப் பதவிகளை பெறவேண்டும் என்று கனேடிய தமிழ் புலம்பெயர் மக்களிடமிருந்து அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன எனவும் பேச்சிலீடுபட்டவர்கள் நல்லாட்சி காலங்களில் ரணிலின் அரசோடு சேர்ந்து இயங்கியவர்கள் எனவும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

**215. பஸிலோடும் மஹிந்தாவோடும் விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் பெற்ற அனுபவத்திற்கு பின்னும் அவர்களை நம்பி எதிலும் ஈடுபடலாமா?**

தமிழர்களை யாரும் ஏமாற்றவில்லை. தங்களை தாங்களே சந்தர்ப்பவாதங்களால் – சந்தர்ப்பவசங்களால் – காரியங்களை முன்னெடுத்து, ஏமாற்றிக் கொள்கிறார்கள். அவற்றில் தோல்வி அல்லது எதிர்பார்ப்புக்களில் ஏமாற்றம் வரும் போது ஏமாற்றி விட்டார்கள் என ஒப்பாரி வைக்கிறார்கள். ஒரு சீரிய திட்டம் இல்லாமல், அவர் சொன்னார், இவர் சொன்னார் என்பதற்காக இறங்கி செயல்படாமல் சூழலைப் புரிந்து கொண்டு காரியமாற்ற வேண்டும்.

தமிழ் மக்கள் தமக்கு ஒரு நீதியான தீர்வு வர வேண்டும் என்று 75 வருடங்களுக்கு மேல், ஒரு திமிர் பிடித்த, நீதி, நியாயங்களுக்கு கட்டுப்பட விருப்பமேயில்லாத ஒரு பெரும்பான்மை சமூகத்துடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதன் வளர்ச்சியில்தான் எமது விடுதலைப் போராளிகள் எழுந்தார்கள் வளர்ந்தார்கள். பின்னர் பஸில் ராஜபக்ஷவின் குழுமத்தாலேயே அழிக்கப்பட்டார்கள். இந்த வரலாறுகளை யாராலும் மறக்க முடியாது. கடந்த கால வரலாறுகளை அனுபவங்களாகக் கொண்டு நிகழ் காலத்தை அந்த அனுபவங்களின் அடிப்படையில் முதலில் பலப்படுத்த வேண்டும். அதன் பின் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டும்.

வீரபாண்டிய கட்டபொம்மன் படத்தில் தளபதி பானர்மன் "(மேற்கிந்திய) கம்பனி ஒரு வர்த்தக ஸ்தாபனம். வாங்குவதும், விற்பதும் எங்கள் தொழில்" – என்று சொன்ன போது கட்டபொம்மன் "அதற்குள் அடங்குவது பொருள்கள். மக்களல்லர்" என்று எதிர்வாதம் வைத்தான். எப்படியாயினும் கட்டபொம்மன் கடைசியில் கயத்தாற்றில் தூக்கில் தொங்கினான். பஸில் புலிகளையும் வாங்கி, விற்றுக் கடைசியில் நந்திக்கடலுக்கும் அனுப்பினார். அவரும் அவரது குடும்பமும் ஒரு வர்த்தக குழுமம். கம்பனி. வாங்குவதும் விற்பதும் அதனூடாக அரசுப் பதவிகளை தக்கவைப்பதும் அவரது வியாபாரக் கெட்டித்தனம். 2005 போலவே தற்சமயம் ஜே.வி.பியும் மற்றவரும் அரசிலிருந்து வெளியேறி கஷ்டங்களை தர முற்படும் இச்சூழலில் சர்வதேசத்தின் கண்துடைப்புக்கு தமிழர்களுடன் பேரம் பேசுகின்றார். அவ்வளவுதான். தங்கள் தலைகளுக்கு தற்போதிருக்கும் ஆபத்தை தலைப்பாகையோடு கழற்றி விட்டால் அதன் பின் தலைகளைக் காப்பாற்றி விடுவார். ஆறு கடக்கும் வரைதான் அண்ணன் தம்பி. பின் நீ யாரோ நான் யாரோதான்.

**216. கனிந்து வரும் சர்வதேச சூழலை நாம் சாதகமாக பாவித்து பஸிலின் ஊடாக ஒரு திட்டத்திற்கு போனாலென்ன?**

சூழல் தரும் சந்தர்ப்பங்களை நாம் பாவிக்க வேண்டும். மறுப்பதிற்கில்லை. ஆனால் அதனை புத்திசாலித்தனமாகப் பாவித்தல் வேண்டும் இந்தியப் பிரதிநிதிகளை கூட்டணியினர் சென்று சந்தித்ததை விட, சம்பந்தரின் சுகவீனம் காரணமாக அமெரிக்க தூதுவர் கூட்டணியினரை அவரது வீடு தேடிப் போய் சந்திக்கின்றார். அவரும் அரசாங்கத்தோடு பேசவேண்டும். என்று அறிவுறுத்தினார். அதேசமயம் பஸிலின் வரவுக்குப்பின் அமெரிக்காவுக்குத் தேவையான சில காரியங்கள் அவர் ஊடாக மிக விரைவாக நடக்கின்றன. அப்படியானால் அமெரிக்காவுக்கு அதனது தேவைகள் நிறைவேற்றப்பட்டு சிறிலங்கா தன்னை அனுசரித்து நடக்கும் என்றால் தமிழர் பிரச்சினை இரண்டாம் தரமாகுமா? இவை தொடர்பில் கூட்டமைப்பினர் தமிழர் பரப்பில் ஆழமான அபிப்பிராயங்கள் எடுத்து, காரியமாற்றும் பொறுப்புக்கள் உண்டு.

டட்லி சேனநாயக்கா அரசில் திருச்செல்வத்தை மந்திரி பதவி ஏற்க வைத்தார்கள் சாதிக்க முடிந்தது என்ன? ஜே.ஆரினால் கே.டபிள்யூ தேவநாயகத்தை அமைச்சராக்க முடிந்தது. 1977 இனக் கலவரத்துக்குப் பின்னர் அவரை வைத்துப் பயங்கரவாத சட்டத்தையும் நீதிபரிபாலனத்துறையில் சிங்களத்தையும் புகுத்தினார்கள். திருச்செல்வம் திருக்கோணேச்சர ஆலயப் பகுதியை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் யாவும் பூர்த்தியாகி வர்த்தமானியில் பிரசுரிக்கப் போகும் வேளை ஒரு புத்த குரு அரச தலைவரை இரவில் சந்தித்தமையுடன் அது நிறுத்தப்பட்டது.

ஆகவே எதிலும் ஓர் அடிப்படைத் திட்டம் இருத்தல் வேண்டும். அதற்கு முதல் முக்கியம் தமிழ் மக்களிடையே தீர்வுக்கான அடிப்படை ஒற்றுமை. அந்த அடிப்படை ஒற்றுமையில் தேசியக் கட்சிகள் யாவும் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற வேண்டும் என்ற நிர்ப்பந்தம் வரவேண்டும். அது இந்தியாவோ, அமெரிக்காவோ, ஐரோப்பாவின் எந்த நாடாகவும் இருக்கலாம். அவை பேசக் கேட்டால் அவர்களுக்கு அனுபவங்களை சொல்லி, அவர்களோடு சேர்ந்து சிறிலங்காவுடன் அடிப்படைத் தீர்வு குறித்துப் பேச வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு நாம் வர வேண்டும். அமெரிக்கா தனது சுயநலனைத்தான் முதலில் பார்க்கும். பல நாடுகளில் மிகக் கிட்டிய காலங்களில் ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தானில் நடப்பவை அனுபவங்களாக வேண்டும்.

**217. தமிழ் தரப்புக்கள் முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகள் இனிமேல் எந்தவொரு நாட்டின் அனுசரணை என்றில்லாமல் அவர்களுடன் கூட்டாக வைத்துப் பேச வேண்டும் என சொல்கிறீர்களா?**

அந்த அணுகுமுறையைக் கடைப்பிடிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அப்படியில்லாவிட்டால் தனித்தனி கட்சிகள் கரும்புக்கும் ஊடக செய்திகளுக்கும்தான் தீர்வென்பது நடக்கும். அதற்கு மேல் எதுவும் நடக்க வாய்ப்பில்லை. ஒவ்வொரு நாடும் தனது சுயநலத்தில் இயங்கும். கூட்டமைப்பினர் இந்தியாவும், இப்பொழுது அமெரிக்காவும் தங்களை அரசோடு பேசுமாறு சொல்கிறார்கள் என தெரிவிக்கிறார்கள். எந்த அடிப்படையில் ஒரு தீர்வை அந்த நாடுகள் சிறிலங்கா அரசுக்கு நிர்ப்பந்தித்துள்ளன என்பதில் எந்தத் தெளிவும் இல்லை.13 ஆவது சரத்தும், இந்திய ஒப்பந்தமும் தற்சமயத்தில் ஐ.நா.மனித உரிமை மன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆகவே இந்த நாடுகள், அந்த அடிப்படையிலாவது தமிழர் தரப்புக்களோடு கூட இருந்து, சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைகளுக்கு நிர்ப்பந்திக்க வேண்டும். சிறிலங்கா அரசாங்கம் எந்த நேரமும், ஐ.நா.மனித உரிமை மன்றில் கூட, எடுத்த வாதம் என்ன? மற்றைய நாடுகளை பிரிவினையை அதிகாரப்பரவல் என்ற போர்வையில் முன்வைத்து, பாவித்து உள்ளிட விட்டு அவர்களது புவியியல் அரசியலை முன்னெடுக்கவிட்டால் நாம் சிறிலங்காவின் இறையாண்மைக்கு சேதம் விழைவித்துவிடுவோம் என்பதுதான். ஆகவே சில நாடுகளில் புவிசார் அரசியல் லாபங்களுக்காக அதிகாரப் பரவல் என்ற பெயரில் பிரிவினையை திரும்பவும் கொண்டு வர இடமளிப்பதன் மூலம் எமது இறையாண்மையை விட்டுக் கொடுக்க மாட்டோம். சிறிலங்காவின் மக்கள் எம்மை தேர்ந்தெடுத்து அதிகாரத்தை கொடுத்ததே முன்னர் நடந்த தவறுகளைத் திருத்தி, மீடும் பழைய நிலையை மீளக் கொணர்ந்து, சிறிங்காவின் ஒற்றையாட்சியைப் பலப்படுத்தத்தான். இந்த மனோபாவத்தில் இருக்கும் சிறிலங்கா அரசின் பஸிலோடு தமிழ் தரப்புக்கள் எந்த அடிப்படையில் பேசுவது? எந்த வியூகத்தைக் கொண்டு பேசுவது?

**218. அப்படியானால் பேசக்கூடாதா?**

பேசலாம். தப்பில்லை. ஆனால் எங்களது கால்கள் அடியெடுப்பதற்கு முன்னால் மிக மிக திடமானதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் நாம் அடிசறுக்கியே இருக்கிறோம். ஒன்றைக் கவனிக்க வேண்டும். இதனை பின்னர் விரிவாகப் பார்ப்போம். விடுதலைப் புலிகள் தாமே தமிழ் மக்களின் ஏதோபித்த பிரதிநிதிகள், அவர்களைத் தமிழ் மக்களிடம் இருந்து பிரித்துப் பார்க்க முடியாது, தாங்களே அவர்களின் காப்பாளர்களென்று நின்றார்கள். கடைசி வரைக்கும் இதே நிலைப்பாட்டிலிருந்தும் தங்களையும் காப்பாற்றிக் கொள்ளவில்லை. இடையில் அகப்பட்ட மக்களையும் காப்பாற்ற முடியவில்லை. அவர்களால் – அவர்கள் எடுத்த நிலைப்பாடுகளால் – எந்தவொரு நாட்டையும் தங்களுக்கு ஆதரவானதாக, தங்களுக்காகப் பேசக் கூடிய ஒன்றாக நிலைநிறுத்திக் கொள்ள முடியவில்லை. அவர்களுக்காக ஆதரவு தந்த ஒரே ஒரு நாடு இந்தியாதான். ஆயுதங்கள் தந்து, பயிற்சி முகாம்கள் அமைத்துக் கொடுத்து, அரசியல் அனுசரனையும் தந்தது இந்தியா மாத்திரமே. விடுதலைப் புலிகள் பிரேமதாஸவிடமே ஆயுதங்கள் வாங்கி இந்திய அமைதிப் படையை தாக்கி அவர்களுடன் சேர்ந்து வெளியேறக் கோரியதில், 1991 இல் இந்தியா அவர்களை பயங்கரவாத பட்டியலில் சேர்த்தது. பின்னர் இரட்டைக் கோபுர தாக்குதலின் பின் அமெரிக்கா, மலேசியா, பிரித்தானியா, கனடா, ஐரோப்பிய யூனியன் என்று அவர்களது முள்ளம் தண்டை உடைக்கும் விதத்தில் நோர்வே பேச்சுவார்த்தைகளின் நடுவே பயங்கரவாதப் பட்டியலில் சேர்ந்தன. இவை விடுதலைப் புலிகளுக்கு பாராதூரமான பின்னடைவுகளைத் தந்தன. ஆனால் இன்று அந்த முனைப்பில் விடுதலைப் புலிகள் இல்லை. ஆகவே அடிப்படைத் தீர்வு திட்டத்தை எல்லா கட்சிகளும் ஒன்றிணைந்து சர்வதேசத்திடம் பேசுவதில் இராஜ தந்திரம் உண்டு.

**219. விடுதலைப் புலிகள் நோர்வே பேச்சுவார்த்தைகளின் போது அப்படியான இராஜதந்திரங்களைக் கையாளவில்லையா?**

ஓரளவு உடும்புப் பிடியில்தான் நின்றார்கள். அவர்களது அறிவிப்புக்களால் மக்களை முன்னிலைப்படுத்தி, அவர்களது பாதுகாப்பையும் கருதி பேச்சுக்களில் முன்னேறாமல் தங்களை நிலை நிறுத்துவதிலேயே அதீத கவனம் எடுக்கிறார்கள் என்ற அபிப்பிராயங்கள் சர்வதேசத்தினிடையே வளரத் தொடங்கியது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகி நோர்வே பேச்சுக்களைப்பற்றி நிலைப்பாடுகளைத் தெரிவித்த போதும் விடுதலைப் புலிகள் நோர்வே, சுவிட்ஸர்லாந்து போன்ற நாடுகளுக்கும் தந்த செய்திகள் அவர்களை அந்நியப்படவைத்தன. அவர்கள் இராணுவப் பலத்திலேயே தங்கியிருக்க விரும்புகிறார்கள் என்பதை அப்போக்கு தெளிவாக தெரிவாக்கியது. ஜூலை 2006 இன் அந்தச் சம்பவங்களைப் பின்னர் பார்ப்போம்.

(வளரும்...)

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# மெய்நிகர் வகுப்பறை 29

## Online Classroom



மெய்நிகர் வகுப்பறையில் பலவகையான கற்றலுக்கான இணையவழி வாய்ப்புக்கள் பற்றிப்பார்த்திருக்கிறோம். அந்த வசதிகள் அமெரிக்காவை மையமாகக் கொண்ட பல் தேசியக் கம்பனிகளுடையதாகவே இருந்திருக்கின்றன. ஒரு வகை மேற்குலகுசார் அல்லது அமெரிக்க சார்பு நிலையில் நின்று பார்க்கின்ற பண்பு மெய்நிகர் வகுப்பறையில் காணப்படுவதாகவும், அதுவே சிறந்தது என்று சொல்ல முற்படுவதாகவும் ஒரு கடுமையான விமர்சனத்தை அண்மையில் நண்பரொருவர் முன்வைத்தார். ஆசிரியர் சார்ந்து பல மெய்நிகர் தளங்கள் காணப்படுகின்றமையும் அவைசார்ந்த கற்றல் வாய்ப்புக்களும் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. குறிப்பாக தற்போது சீனா சார்பு நிலை நோக்கி பயணிக்கிறது என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்ற நிலையில். அமெரிக்கசார்பு டிஜிற்றல் உலகுபற்றி மட்டுமே பேசுவது யதார்த்தமானதல்ல என்பதால் இன்று இங்கு சீனாவின் மிகப்பெரிய வணிக நிறுவனமான அலிபாபா நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட டிங்டாக் என்ற செயலி பற்றிப்பார்க்கலாம். இது மேற்காசியப்பகுதிகளில் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது. உலகம் முழுவதும் 20 கோடி மக்கள் இதனைப் பயன்படுத்துகிறார்கள்.

இன்று கொவிட் 19 காரணமாக புதிய வேலைமுறைக்கு உலகம் மாறிவிட்டது. தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் பெரிதும் முன்னேறிய ஒரு சகாப்தத்தில் ஒவ்வொருவரதும் வாழ்வில் தொழில்நுட்பம் ஒரு பெரிய பாத்திரத்தை வகிக்கிறது மற்றும் உதவுகிறது. அதுவே இன்று வேலையின் செயல்திறனாக மாறிவருகின்றது. செயல்திறன் அளவீடாகவும் மாறிவிட்டது.

வீட்டிலிருந்து வேலை செய்வது, வீட்டிலிருந்து கற்பது போன்ற சூழலில், நெகிழ்வான பணியிடம் மற்றும் பாடசாலையை உருவாக்கும் சிறந்த தொழில்நுட்பத்தைப் பெறுவதற்கான வழிகளைப்பற்றி ஆராய்கின்ற அதே வேளை. அதற்கான சிறந்த தீர்வை வழங்கி இலாபமீட்டுவதற்கு பல்தேசிய நிறுவனங்கள் முயன்று வருகின்றன.

இன்று புதிய உலக ஒழுங்கு என்பது தொலைதூர வேலை, தொலைதூர கல்வி என்பதாக மாறிவிட்டது எனலாம். நிறுவனங்கள் மத்தியில் இதுவே பிரபலமாகி வருகிறது. உலகளவில் மேலும் மேலும் உருவாகும் நெருக்கடிக்கு புதிய புதிய தேவைகள் உருவாகின்றன.

இதற்கான சிறந்த தீர்வாக 'டிங்டாக்' **(DingTalk)** அறிமுகமாகியிருக்கின்றது. இது முதன்முதலில் 2014 இல் அலிபாபா நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. சீன ஈ - வணிக நிறுவனமான அலிபாபாவின் நிறுவனர் ஜாக் மாவின் முயற்சியால் டிங்டாக் டிசெம்பர் 2014 உருவாக்கப்பட்டது. முதல், டிங்டாக் அதிவேகமாக வளர்ந்து, நிறுவனங்களுக்காக வடிவமைக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய அரட்டை சேவையாக மாறியுள்ளது, இதில் 200 மில்லியனுக்கும் (2 கோடி) அதிகமான தனிப்பட்ட பயனர்களும், சீனா முழுவதும் 7 மில்லியன் (70 கோடி) முதலாளிகளும் உள்ளனர். ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் தென்கிழக்கு ஆசியாவிலும் வளர்ந்து வருவதாக நிறுவனம் கூறுகிறது.

சூம், மைக்ரோசாஃப்ட் டீம் போன்ற பிரபலமான பயன்பாடுகள் போன்றது தான் டிங்டாக். ஆடியோ - வீடியோ மாநாட்டுக்கான வசதிகள், அரட்டை வசதிகள் உண்டு. ஒருவருக்கொருவர் அல்லது குழு அரட்டை அறை வசதிகள், டிங்டாக் இல் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 3,000 பேர் வரை அதிகரிக்க முடியும். பதிவு சேமிப்பு, அரட்டை, கோப்பு பகிர்வு, செய்தி அறிவிப்பு, செய்தியை அனுப்புதல் மற்றும் தொலைபேசி அழைப்புகான வாய்ப்புக்களும் உள்ளன. மேலும், ஒரு நிறுவனம் பற்றிய தொடர்புடைய அனைத்து தகவல்களையும் வைக்கக் கூடியதாக விருக்கும். ஒரு நிறுவன தரவுத் தளத்தைப் பேணுவதற்கும், நிறுவன வேலை ஒதுக் கீடு மற்றும் கண்காணிப்பு அமைப்பு, கலண்டர் சேகரிப்பு மற்றும் பணியாளர் கட்டமைப்பு, சந்திப்பு அறை முன்பதிவு அமைப்பு போன்ற பல்வேறு விடயங்களையும் இதில் சரிபார்க்கும் வசதி உள்ளது.

டிங்டாக் ஒரு சீனப் பயன்பாடு மற்றும் இன்னும் முக்கியமாக சீனாவில் பயன்படுத்தப்படுகிறது என்றாலும் இப்போது ஜப்பான், இந்தியா மற்றும் பல நாடுகளின் நிறுவனங்கள் பயன்படுத்தத் தொடங்குகின்றன. இதில் முக்கியமானதும் மிகவும் பிரபலமானதுமான செயல்பாடு டிங் செய்தி. முதலாளிகள் தங்கள் பணியாளர்களுக்கு செய்திகளை அனுப்பலாம். அதாவது செய்திகளை ஒரு வழியில் அனுப்புவது மட்டுமல்லாமல் எஸ்.எம்.எஸ். மற்றும் தொலைபேசி வழியாகவும் அனுப்பலாம். மேலும், செய்தியை யார் படித்தார்கள், யார் படிக்கவில்லை என்பதை சரிபார்க்கலாம். வாட்ஸ்அப்பைப் போலவே, பெறுநர்களும் செய்திகளைப் படித்திருக்கிறார்களா என்று டிங்டாக் அனுப்புகிறது, ஆனால் இது ஒரு 'டிங்' அம்சத்தையும் கொண்டுள்ளது, இது பெறுநர்களை மீண்டும் அறிவிப்புகள், குறுஞ்செய்திகள் மற்றும் தொலைபேசி அழைப்பு நினைவூட்டல்களுடன் வழங்கமுடியும். ஒரு நாளைக்கு 10,000 செய்திகளை அனுப்ப முடியும். நிறுவனத்தின் நேரத்தை முகாமை செய்கிறது. நிறுவனம் தானியங்கி செலவின உரிமைக்கோரல்கள், ஊழியர்கள் இருக்கும் இடத்தை கண்காணிக்க ஒரு கடிகார அமைப்பு, அத்துடன் பூர்த்தி செய்யப்பட்ட பணிகளை பட்டியலிட தொழிலாளர்கள் தேவைப்படும் 'தினசரி அறிக்கை' செயல்பாடு உள்ளிட்ட பல வகையான செயல்பாடுகளை டிங்டாக் கொண்டுள்ளது. உள்ளே மற்றும் வெளியே வேலை செய்வது போன்ற நிலைமையில் டிங்டாக் மதிய உணவு இடைவேளை மற்றும் வேலையை முடிக்கும்போது எச்சரிக்கை செய்யும், அத்துடன் கூடுதல் நேர ஊதியத்திற்கான செயல்பாட்டினை அறியத் தரும்.

ஆனால் அதன் விரைவான உயர்வு - ஊழியர்களின் இயக்கங்களை சிறப்பாகக் கண்காணிப்பதன் மூலமும் முக்கியமான செய்திகளுக்கு விரைவான பதில்களின் மூலமும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் என்ற உறுதிமொழியால் வலுப்படுகின்றது.

எனினும் டிங்டாக் வளர்ந்து வருகின்ற அதே வேளை, பல சீன அலுவலக ஊழியர்கள் இந்தச் சேவையைப் பற்றி ஒன்லைனில் தங்கள் விரக்தியை வெளிப்படுத்தியுள்ளனர், இது மனிதாபிமானமற்றது மற்றும் நம்பிக்கையை அழிக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள்?

டிங்டாக்கைப் பயன்படுத்தும் 30 தொழிலாளர்களின் முறைசாரா ராய்ட்டர்ஸ் நிறுவனம் ஒரு கருத்துக் கணிப்பில், பயன்பாட்டைப் பற்றி பாதி பேருக்கு எதிர்மறை உணர்வுகள் இருக்கின்றன என குறிப்பிடுகிறது.

பல முரண்பட்ட கருத்துக்கள் இருப்பினும் வணிகத்தில் பிரபலமான டிங்டாக் தற்போது மெய்நிகர் கற்பித்தலிலும் பாடசாலைகளில் இது பிரபலமடைந்து வருகிறது.

(வளரும்.....)

# ஆண் ஒருவரின் சடலம் மட்டக்களப்பில் மீட்பு

மட்டக்களப்பு - தாழங்குடா பகுதியிலுள்ள வீடொன்றின் கூரையில் ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாழங்குடா சமுர்த்தி வங்கி வீதியைச் சேர்ந்த மேசன் தொழிலாளியான (வயது 45) 3 பிள்ளைகளின் தந்தையான விக்டர் சுஜித்குமார் என்பவரே சடலமாக கடந்த சனிக்கிழமை காலை கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கடந்த வெள்ளிக்கிழமை கணவன் மனைவிக்குள் ஏற்பட்ட சண்டையைத் தொடர்ந்து மனைவி பிள்ளைகளுடன் அவரது தாயார் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இவ்வாறு அவர்கள் சென்றதன் பின்னர் தனிமையில் இருந்த குறித்த நபர் வீட்டிலேயே தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம், தற்போது பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தனிமைப்படுத்தல் நடைமுறைகள் தண்டனையாக அமையக் கூடாது

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 12

சுகாதார நடவடிக்கையான தனிமைப்படுத்தல் செயல்முறை ஒரு தண்டனையாகவோ அல்லது தடுப்புக்காவல் நடவடிக்கையாகவோ இருக்கக்கூடாது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்ப்புத் தெரிவிக்கும் சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில் சுகாதார வழிகாட்டுதல்கள் பயன்படுத்தப்படுவதற்கு இடமளிக்கக் கூடாது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்து அந்தச் சங்கம் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளது.

நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் அல்லது நோயால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும் என சந்தேகிக்கப்படுகின்றவர்களுக்கு மாத்திரமே தனிமைப்படுத்தல் பொருந்தும் எனவும் பிணையில் விடுவிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்தல் நிலையங்களில் வலுக்கட்டாயமாக தடுத்து வைப்பது சட்டவிரோதமான செயல் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள்

## இன்று அவரது நினைவுதினம்



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

ஈழத்தின் கிழக்கில் தோன்றிய முத்து - தமிழைச் சுமந்தபடி தரணியெங்கும் ஒளிவீசி நின்றது.அந்த முத்தின் வாழ்க்கை இரு நிலைகளில் அமைந்தது. படித்துப் பட்டம் பெற்று - பண்டிதராய், கல்லூரி ஆசிரியராய், அதிபராய், தந்தை தாய் வைத்த மயில்வாகனன் என்னும் பெயரோடு சமூகத்தில் பயணித்த காலம்.மயில்வாகனன் என்னும் பெயரைக் கடந்து -

ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல

என்னும் மனப்பாங்கினைப் பெற்று - 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் விசாலித்த நோக்குடன், இராமகிருஷ்ண மடத்துடன் ஐக்கியமாகி, துறவியாகி, விபுலானந்தர் என்னும் அடையாளத்தைத் தனதாக்கி இவ்வுலகைவிட்டு போகும்வரை பயணித்த காலம் எனலாம்.

முத்தமிழ் வித்தகராய் முழுப் பேராளுமையாய் விளங்கிய எங்கள் விபுலானந்தத் துறவியை இப்படியும் பார்க்கலாம்.

காரைதீவு மண்ணில் பிறந்தவர், யாவர் மனத்திலும் இன்றும், என் றும் வாழ்ந்து கொண்டே இருப்பார் என்றால் - அதற்குத் திருப்பு முனையான காலமாய் அமைந்தது முத்தமிழ் மாமுனிவரின் துறவறத்தின் பின்னான காலம் என்றே சொல்லலாம்.1924 ஆம் வருடம் மயில்வாகனனை மாநிலம் அறிந்திட மலரச்செய்த காலம் எனலாம்.

மயில்வாகனன் லண்டன் பல்கலைக்கழகத்தின் அறிவியல் பட்டதாரியாய், மேல்நாட்டு உடையுடன் மிடுக்குடன் இருந்த கோலம் மாறி - உடையாலும் , உள்ளத்தாலும் தாமரை இலைமேல் நீர் போன்ற நிலைக்குள் வந்து - துறவியாய் பிறப்பெடுத்த காலம்.

**வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ**
**வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது**

என்று சிந்திக்கும் நிலையினை அடைந்த காலம் தான் துறவுக்காலம் என்பதை முத்தமிழ் வித்தகரின் வார்த்தைகளே சான்று பகர்வதாய் இருக்கிறதல்லவா?

மயிவாகனன் விரும்பி இருந்தால் - அவருக்கு வாய்த்த வாய்ப்புகளைப் பயனாக்கி இல்லறத்தில் இணைந்து இகபோக இன்பங்களை இஷ்டமுடன் ஏற்றிருக்கலாம். ஆனால் அவரைக் கருவில் உருவாக்கிய அந்த ஆண்டவனே அவரை அகிலத்துக்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் – துறவுக்குள் அவர் மனத்தை நாட வைத்துவிட்டான். இல்லறத்தில் இணைந்திருந்தால் காரைதீவின் மைந்தன் மயில்வாகனன் குடும்பஸ்தனாகி குழந்தைகளுடன் குடித்தனம் நடத்தி சாதாரணமானவராகவே மறைந்திருப்பார். ஆனால் கிழக்கின் முத்தாய் ஒளி விட்டு எல்லோர் இதயத்திலும் பதிந்திருக்கிறார் என்றால் அதற்கு வழி வகுத்தது துறவுதான்.

சுந்தரரை இல்லறத்தில் இணைய விடாமல் எம்பெருமான் தடுத்தாட் கொண்டார். அரச போகத்தில் இருந்த சித்தார்த்த கௌதமர் இல்லறத்தை ஒதுக்கி இறைஞானம் பெற்றார். அதே போன்ற ஒரு நிலையினையே மயில்வாகனுக்கும் கிடைத்தது. எல்லாமே இறையருள் அல்லால் வேறென்றும் இல்லை.

ஆண்டவனின் பரிபூரணமான அனுக்கிரகத்தைக் கருவிலே தாங்கி வந்த காரணத்தால் அடிகளாகி, ஆசானாகி, பேராளுமையாய் பிரகாசித்து பயனுற வாழ்ந்தார். விஞ்ஞானம் படித்தவர் மெஞ்ஞானத்துள் மூழ்கிறார். தமிழை மூச்சாக்கி நிற்கின்றார். சமரச சன்மார்க்கத்தின் வழியில் பயணப்படுகிறார். ஆனால் சைவத்தைக் கைகளில் ஏந்துகிறார். இவையெல்லாம் துறவால் விளைந்த விளைவுகள்.துறவு வாழ்க்கை என்பது முத்தமிழ் வித்தகரின் பாதையில் வாய்த்த பெரும் பொக்கிஷம்.

துறவறத்தின் பின்னர்தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதற் தமிழ்ப் பேராசிரியராகிறார். தமிழ் நாட்டில் தமிழ் அறிந்த பல பேர் இருந்தும் – ஈழத்து மைந்தனை எப்படித் தமிழ்ப் பேராளுமையாக அண்ணாமலைச் செட்டியார் கண்டுகொண்டார் என்றால் – அதுதான் துறவறத்தின் பெருவெளிச்சம். பற்றுக்களை அறுக்கிறார். ஆனால், மொழியில், சமயத்தில், கலாசாரத்தில், பண்பாட்டில், ஆராய்ச்சியில், சமூகத்தொண்டில், இசையில், நாடகத்தில் கொண்ட பற்றுக்களை இழந்தாரல்லர். அவற்றில் அவரின் பற்றானது பல்கிப் பெருகி பயனளிக்கும் வகையில் அமைந்தது. இவையாவும் துறவு வாழ்க்கையின் பின் துலங்கியது என்பது தான் மிகவும் முக்கியமாகும்.

**நல்லைநகர் நாவலர் பிறந்திலரேல்**
**சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே**

என்று போற்றப்படும் நாவலர் பெருமான இல்லறத்தை விட்டு துறவுநிலையில் நைட்டிக பிரம்மச்சாரியாய் ஆனபின்தான் - அவரின் பணிகள் ஆல் போல் விருட்சமாகின. வேதாசலம் – மறைமலையடிகள் ஆனதின் பின்தான் அவரின் பணிகள் துலங்கின. நாவலர் பெருமானை நல்ல அரசாங்க உத்தியோகத்தில் பார்த்திட அவர் குடும்பத்தார் விரும்பினார்கள். ஆங்கிலக் கல்வியைக் கற்ற ஆறுமுகமும் அக்காலத்தில் நல்ல உயர் பதவியில் அமர்ந்து இல்லறத்துள் புகுந்திருந்தால் – எல்லோரும் ஏற்றிப் போற்றும் நல்லை நகர் நாவலர் என்னும் பொக்கிஷம் எமக்குக் கிடைத்திருக்குமா? ஆறுமுகம் துறவுக்குள் சென்றதால்தான் – கந்தபுராண கலாசாரம் வந்தது. சைவம் பிழைத்தது. தமிழும் தளைத்தது.

முத்தமிழை மூச்சாக்கினார் அடிகளார். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எங்களின் சொத்துக்களாகும். பழந்தமிழ் இலக்கியங்கள் முத்தமிழினைப் போற்றியே நின்றன. பழந்தமிழ் இலக்கியங்களை இதயத்தில் இருத்திய அடிகளார் - பழந்தமிழ் இசையினை ஆராய முற்படுகிறார். இலக்கியத்தை, இலக்கணத்தை, வரன்முறையாகக் கற்றவர் அடிகளார். அதேவேளை பன்மொழிப் பாண்டித்தியமும், விஞ்ஞானப் புலமையும் மிக்கவர். குறிப்பாக பௌதிகத்தில் பேராளுமை உடையவர். தான்கற்ற பௌதிக அறிவை முன்னிறுத்தி பழந்தமிழ் இலக்கியத்தில் இருக்கின்ற இசையினை ஆராய முற்படுகிறார். அவரின் அளப்பெரும் ஆராய்ச்சியால் வையம் பயனுற வாய்க்கிறது யாழ்நூல். யாழ் நூலினைத் தந்திட்ட முத்தமிழ் மாமுனிவரின் பேராற்றலை வியக்காதார் இல்லை எனலாம். எவருமே தொடாத துறை. எவருடைய ஆராய்ச்சிக்கும் எட்டாத துறை. அந்தத்துறையைத் தொட்டிருக்கிறார் எங்கள் விபுலானந்தத்துறவி. இப்பேராராய்ச்சி மலர்ந்ததும் கூட முத்தமிழ் வித்தகரின் துறவின் பின்தான்.

நரேந்திரன் விவேகானந்தர் ஆனபின்தான் இராமகிருஷ்ண அமைப்பே உருவாகிறது. வீரத்துறவியாய், அதேவேளை ஈரத்துறவியாய் பரிணமிக்கிறார். 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதை பல நிலையிலும் நிலை நிறுத்துகிறார். இந்த வழியை எங்கள் முத்தமிழ் முனிவரும் மனத்தினில் பதிக்கிறார். முத்தமிழ் முனிவரும், விவேகானந்தர் எப்படி துறவறத்தின் பின் துலங்கினாரே அப்படியேயான் துறவுக்குப்பின் துலங்கி நின்றார்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் முதல்தமிழ் பேராசிரியரான பின்னர் இலங்கை பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராயும் அணி செய்கின்றார். கல்வியை, சமயத்தை, சமூகத்தைக் கருத்திருத்தி அவர் ஆற்றிய அத்தனை பெரும் பணிகளும் துறவுக்குப் பின்தான்.

இலங்கையில் பல பகுதிகளில் கல்விக்கூடங்களை நிறுவினார். ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளி விளக்கை ஏற்றிவைத்தார். இலக்கிய கட்டுரைகள், சமய சன்மார்க்கக் கட்டுரைகள் , ஆராய்ச்சி நூல்கள், மாநாடுகள் பலவற்றில் பேருரைகள், என்றுமே பயன்தரும் வகையில் பல நயமிக்க, பொருள் பொதிந்த கவிதைகள், கவிதை நூல்கள், என்று பல்துறைகளில் – பன்முக ஆற்றல்களை வெளிப்படுத்திய காலம் முத்தமிழ் வித்தகரின் துறவுக்காலமேதான் என்பதுதான் உண்மையாகும்.

ஐம்பத்து ஐந்து ஆண்டுகள்தான் அவருக்கு ஆண்டவன் கொடுத்த வாழ்வாகும். அதிலும் அவர் துறவில் அவர் வாழ்ந்த காலம் இருபத்து மூன்று ஆண்டுகளே. ஆனாலும் அந்தக் காலத்தில் போதித்ததோடு நின்றுவிடாமல் சாதித்தும் காட்டினார். நல்லவைகளை எல்லாம் அவர் விரும்பினார் ஏற்றுக் கொண்டார். அல்லவைகளை அவர் பார்த்தாரில்லை. அவற்றை நினைத்தாருமில்லை. அவரின் ஆக்கங்கள், அவரின் தொண்டுகள் என்றுமே எங்கள் மனத்தைவிட்டு அகன்றுவிடவே மாட்டா.

அதனால்த்தான் அவருக்கு விழாக்கள் எடுக்கிறோம். அவருக்குச் சிலை எடுக்கிறோம். அவர்பற்றிய மலர்களையும் வெளியிடுகிறோம். துறவு என்றால் காட்டுக்குள் ஓடுவதல்ல. துறவு என்றால் சமூகத்தைவிட்டு ஒதுங்கி நிற்பதும் அல்ல.துறவு என்றால் காவியை அணிந்து, மொட்டை அடித்து, மௌனமாய் குகைக்குள் புகுந்து இருப்பதும் அல்ல.

மக்கள் மத்தியில் வாழவேண்டும். மக்களுக்கு ஏற்றச் சேவைகளைச் செய்ய வேண்டும். மொழியை, பண்பாட்டை, கலாசாரத்தை, சமயத்தை, சன்மார்க்கத்தை, அறிவியலை, சமூகத்துக்கு எப்படியாயினும் கொடுக்க வேண்டும் என்பதை துறவின் வழியில் பயணப்பட்டே கொடுத்த பேராளுமையாய் விளங்குபவர் தான் எங்களின் முத்தமிழ் வித்தகர் விபுலானந்த துறவி. அவரின் பெயரினை உச்சரிப்பதும், நினைப்பதும் கூட எங்களுக்குள் நல்லதோர் உணர்வை, ஊக்கத்தை, உந்துதலை,உருவாக்கும் என்பதுதான் உண்மையாகும்.

---

# மூன்று கோடி ரூபா பெறுமதியான கஞ்சாவுடன் யாழில் மூவர் கைது

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கடற்பரப்பில் 3கோடியே 70 லட்சம் ரூபா பெறுமதியான 103.75 கிலோகிராம் கஞ்சாவுடன் மூன்று சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கடத்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

வடக்கு கடற்பரப்பில் சந்தேகத்திற்கு இடமான முறையில் கேரள கஞ்சாவை கடத்த முற்பட்ட வேளையில் கடற்படையின் வடக்கு கட்டளையகத்தால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே குறித்த படகு கைப்பற்றப்பட்டுள்ளது.

சர்வதேச கடல் எல்லைக் கோட்டு பகுதியில் இருந்து நாட்டுக்குள் கடத்த நினைத்து கடத்தல்காரர்கள் படகுக்குள் கஞ்சாவை வைத்திருக்கலாம் என கடற்படை சந்தேகிக்கிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கிளிநொச்சி மற்றும் பருத்தித்துறை பிரதேசங்களில் வசிக்கும் 20 தொடக்கம் 40 வயதுடையவர்கள் எனக் கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா மற்றும் படகு என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# மீண்டும் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்க தயாராகும் ஒன்றிணைந்த சுகாதார சேவையாளர்கள்

*கொழும்பு, ஜூலை 19*

ஒன்றிணைந்த சுகாதார சேவையாளர்கள் சங்கம் மீண்டும் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக அந்தச் சங்கத்தின் பிரதான செயலாளர் டெம்பிட்டியே சுகதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரித்தல், புதிய சேவையாளர்களை நிரந்தரமாக்குதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்துஇந்தப்போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தத் தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பிக்கும் தினம் தொடர்பாக தீர்மானிக்கப்படும் என ஒன்றிணைந்த சுகாதார சேவையாளர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மூத்த எழுத்தாளர் எம். அஷ்ரப்கானின் வானொலி முஸ்லிம் சேவையில் நாளை



வானொலி பிரியர்களுக்கு பரிச்சயமான நாமம் "எம்.அஷ்ரப்கான்" எனும் பெயர். வானொலி நாடகத்துறை தத்தெடுத்துக்கொண்ட நாமம் கூட. முஸ்லிம் நிகழ்ச்சிகள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாக துவங்கிய காலம். அந்த காலத்திலேயே பள்ளி மாணவனாக முஸ்லிம் நாடக அரங்கில் நுழைந்தவர்.

"எது தியாகம்?" – இது கலாபூணம் எம்.அஷ்ரப்கான் எழுதிய முதல் நாடகம். 1958 இல் எழுதினார். வயதும் அனுபவமும் அதிகரிக்க அவரது எழுத்துக்களை நாடக அரங்கு அங்கீகரித்தது.

நாடகங்கள் சுய விளம்பரத்துக்காக எழுதப்படுபவை அல்ல. சமூகத்துக்காக, தனி மனித ஆத்மாவுக்காக எழுதப்பட வேண்டும் என்ற உந்துதலில் யதார்த்தமாக நாடகங்கள் எழுதினார். அதனால் இவரது ஒவ்வொரு நாடகமும் சமூக மறுமலர்ச்சிக்கு வித்திட்டது. முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பான இவரது நாடகங்கள் மதம் கடந்தும் கடல் கடந்தும் பேசப்பட்டன. இலங்கை வானொலி தமிழ்ச்சேவையும், வர்த்தக சேவையும் இவரது நாடகங்கள் மீது ஆர்வம் காட்டின.

முஸ்லிம் சேவைக்கும், தமிழ் சேவைக்கும் நாடகங்கள் எழுதினார். இவர் கற்பனையில் உருவான கதாபாத்திரங்கள் உயிரோட்டமாய் மக்கள் மத்தியில் உலா வர பங்களிப்புகள் நல்கிய நம்மூத்த கலைஞர்களின் அபார நடிப்பும் கடின உழைப்பும் இவருக்கு துணை சேரவே நாடக எழுத்துலகின், நாயகனானர் எம். அஷ்ரப்கான். இவ ரது நாடகங்களில் நடித்தோர் புகழின் உச்சம் தொட்டு ஒரு சினிமா நட்சத்திர அந்தஸ்தினை தமதாக்கிக் கொண்டார்கள்.

இலங்கை வானொலி வர்த்தக சேவையில் ஒலிபரப்பான இவரது "ஒரு வீடு கோயிலாகிறது." தொடர்நாடகம், பெரும் புகழையும் பெயரையும் இவருக்கு தேடிக் கொடுத்தது. தமிழ்த்திரையுலகின் பிரபல சினிமா கலை ஞர்கள் பலரது கவனத்தினை ஈர்த்ததோடு, சிவாஜிகணேசனின் பாராட்டினையும் பெறவைத்தது. சமூக நாடகங்கள் மட்டு மல்லாது சரித்திர நாடகங்கள் எழுதுவதிலும் இவர் பெயர் பெற்று விளங்கினார். இவரது நாடக பணிக்காக "உண்டா" எனும் சர்வதேச விருதும் இவருக்கு கிடைத்தது.

பின்னாள்களில் முஸ்லிம் சேவையின் தயாரிப்பாளராகி பல்வேறு நிகழ்ச்சிகளை தயாரித்தளித்ததோடு தனது நாடகங்களையும் பல மூத்த நாடக ஆசிரியர்களின் நாடகங்களையும் மிக நேர்த்தியாக தயாரித்தளித்து, வானொலி நாடக தயாரிப்புத் துறையிலும் தடம் பதித்தார்.

தொலைக்காட்சி, மேடைநாடகங்களிலும் பாடல் இயற்றுவதிலும் இவரது பங்களிப்புகள் வியாபித்து சென்றுள்ளன. இஸ்லாமிய, தமிழ் இலக்கியங்களிலும் தேர்ச்சி பெற்ற அல்ஹாஜ் எம்.அஷ்ரப்கான், ஒரு ஆசிரியராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றார்.

நாடக, பாடல், திரைத்துறையின் இன்னும் ஒரு புகழ்பெற்ற ஆளுமை கலாபூணம் எம், அஸ்வத்கான் இவரது மூத்த சகோதரர். இவரது மூத்த சகோதரி தமிழ் பண்டிதர் ஹம்ஸா ஆரிப் முஸ்லிம் சேவையின் புகழ்பூத்த நிகழ்ச்சியான "ஸௌத்துன்னிஸா" எனும் மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சியின் ஆரம்ப கர்த்தா. இவர்கள் இருவரும் பாரம்பரியம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தம் வானொலி அனுபவங்களை பகிர்ந்து கொண்டமை இங்கு குறிப்பிடக்கூடியதே.

கனடா நாட்டின் ஒட்டோவாவில் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் கலாபூணம் எம்.அஷ்ரப்கான் அவர்கள் நாளை (20.07.2021) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில் இணையதளம் ஊடாக அதிதியாக கலந்துகொள்கிறார்.

நிகழ்ச்சியினை முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்.ஜே. பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

– எம்.எஸ்.எம். ஜின்னா –

## 2,250 கர்ப்பிணிகளுக்கு கொரோனாத் தொற்று!

### அவர்களில் 13 பேர் சாவு

நாடளாவிய ரீதியில் இதுவரை 2 ஆயிரத்து 250 கர்ப்பிணிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என குடும்ப நல சுகாதார பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

தொற்றுக்குள்ளானவர்களில் 13 கர்ப்பிணிகள் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

கர்ப்பிணிகளுக்குத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனினும், கொரோனா வைரஸ் பரவலின் தீவிரத் தன்மையைக் கருத்திற்கொண்டு மிகவும் அவதானமாக இருக்குமாறு கர்ப்பிணிகளுக்கு வைத்தியர் சித்ரமாலி டி சில்வா எச்சரித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் காணப்படுமாயின், உடனடியாக சிகிச்சை நிலையங்களுக்குச் செல்லுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## 'லலித் வசந்த' சுட்டுக்கொலை

திட்டமிடப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடைய 'லலித் வசந்த' பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியாகியுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சீதுவைப் பகுதியில் கட்டளையை மீறி பயணித்த அதிசொகுசு வாகனம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வாகனத்தில் பயணித்த நபர் பலியாகியுள்ளார்.

## மலையகச் சிறுமியின் மரணத்தில் மறைந்துள்ள மர்மம் துலங்கட்டும்!

### சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து

மலையகச்சிறுமியின் மரணம் தொடர்பாக உண்மை கண்டறிப்பட வேண்டும். சிறுவர்களைப் பணிக்க மர்த்த முயலும் முகவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சிறுவர்களின் கல்வி கற்கும் உரிமையும் உறுதி செய்யப்பட வேண்டும். – இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்.

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ரிஷாத் பதியுதீனின் இல்லத்துக்கு கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்டோபரில் டயகம 3ஆம் பிரிவில் இருந்து 15 வயதுச் சிறுமி வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார்.

கடந்த 03ஆம் திகதி தீக்காயங்களுடன் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 15ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமியின் மரணம் தொடர்பாக அவரது குடும்ப உறுப்பினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ள நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

குறித்த சிறுமியின் மரணம் தொடர்பாக உண்மை கண்டறிப்பட வேண்டும். சிறுமியின் மரணத்தில் மறைந்துள்ள மர்மம் துலங்க வேண்டும். நீதிக்கு மேல் எவரும் இல்லை. இந்த விடயத்தில் சரியான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதன் ஊடாக நீதி நிலை நாட்டப்படும் என நம்புகின்றேன்.

இதேபோன்று நாட்டில் எத்தனையோ விடயங்கள் எங்களுக்குத் தெரியாமல் நடந்து கொண்டிருக்கின்றன. முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் வீட்டில் இந்த விடயம் நடைபெற்றுள்ளமையினாலேயே வெளியில் தெரியவந்துள்ளது.

எனினும், எங்களுக்குத் தெரியாமல் எங்கெங்கோ எல்லாம் இதுபோன்ற சம்பவங்கள் தினந்தினம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அத்துடன், சிறுமிகள் மீதான பாலியல் துன்புறுத்தல்களும், பாலியல் துஷ்பிரயோகங்களும் தினந்தோறும் வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகளைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை இலங்கை அரசு விரைந்து முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியின் அளவும் அதிகரிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர்களினால் விரைந்து நடவடிக்கை எடுக்க முடியும் என நான் நம்புகின்றேன்.

குறித்த அதிகார சபைக்கு குறைந்த அளவிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இதன்காரணமாக அவர்கள் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அதேபோன்று, சிறுவர்களின் கற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படுவதுடன், அவர்கள் பணிக்கமர்த்தப்படுகின்றனர். இவ்வாறு அவர்கள் தங்களது இளம் வயதிலேயே பணிக்கமர்த்தப்படுகின்றமை காரணமாகவே இவ்வாறான அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். எனவே, முதலில் முகவர்கள் ஊடாக சிறுவர்கள் பணிக்கமர்த்தப்படுகின்ற செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும்.

சிறுவர்களைப் பணிக்கமர்த்த முயலும் முகவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என அரசிடம் வலியுறுத்துகின்றேன்.

அத்துடன், சிறுவர்களின் கற்றல் நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு அவர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும் – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## நீதி கோரி ஹற்றனில் போராட்டம் மலையகச் சிறுமி மரணத்துக்கு

மலையகச் சிறுமியின் மரணம் தொடர்பில் உண்மை கண்டறியப்பட வேண்டும், குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி ஹற்றனில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் முன்னணியின் தலைவர் வீ.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் சமூக செயற்பாட்டாளர்களும் பங்கேற்றிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலை செய்த நிலையில் மர்மமான முறையில் உயிரிழந்த சிறுமியின் மரணத்துக்கான காரணம் கண்டறியப்பட வேண்டும், தரகர் முதல் சிறுமியை வேலைக்கு அமர்த்தியவர்கள் வரை இதனுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

அத்துடன், வீட்டுப் பணியாளர்களாக செல்லும் பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்தும், பெண்களுக்கான உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியும் இதன்போது குரல் எழுப்பப்பட்டது.

---

## நல்லூரில் ஆசிரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தனர்.

திருடப்பட்ட நகைகளில் பெரும்பாலானவை சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

நல்லூர் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள ஆசிரியரின் வீடொன்றில் கடந்த 4ஆம் திகதி நகைகள் திருடப்பட்டன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது. அதனடிப்படையில் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸார் முன்னெடுத்த விசாரணையில் நாவற்குழியைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 7 தங்கப் பவுண் தாலிக்கொடி, நெக்ளஸ், ஒரு தங்கப் பவுண் அளவுடைய 3 சங்கிலிகள், 3 சோடி தோடுகள், ஒரு மூக்குத்தி, 2 மோதிரங்கள், பெறுமதி வாய்ந்த அலைபேசி ஒன்று மற்றும் 2 பவுண் தங்க நகையை விற்பனை செய்த சிட்டை என்பன கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவார்.

---

## 'மேதகு' படத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நுவரெலியா, ஹாவாஎலிய பிரதேசத்தைச் சேர்ந்த இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியா, பிரதான பஸ் தரிப்பிடத்தில் வியாபார நிலையமொன்றை நடத்தி வரும் நபரொருவரும் அவரது நண்பர் ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியா, கார்கில்ஸ் கட்டட வளாகத்திலுள்ள பிரதான சந்தேகநபருக்குச் சொந்தமான மற்றொரு கடையில் 50 ரூபா வசூலிக்கப்பட்டு, படம் பிரதியெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மேற்படி இருவரையும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தவுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று நுவரெலியா பொலிஸார் மேலும் கூறினார்.

---

## தமிழ் ஊடகத்துறை...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆலோசனையை 'முரணிலை உபதேசம்' ஆக நான் பார்த்தேன்.

இதேபோன்ற ஆக்கபூர்வமான முரணிலை உபதேசங்கள் என் ஊடக வாழ்வில் மேலும் மூன்று பேரிடம் நான் பெற்றேன்.

ஒருவர் நான் நெருங்கிப் பழகிய மதியுரைஞர் பாலசிங்கம். மற்றவர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன். அடுத்தவர் இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்ல.

இந்தத் தொடரிலேயே அவை பற்றிய சுருக்கத்தை அடுத்து வரும் தினங்களில் பார்ப்போம்.

(வளரும்.........)

காலைக்கதிர் Kalaikkathir




# உலகளாவிய கலாசார சாரணர் ஜம்போரி நிகழ்வில் ஜனாதிபதி கோட்டா பங்கேற்பு

இம்முறை இடம்பெறும் மெய்நிகர் உலகளாவிய கலாசார சாரணர் ஜம்போரி நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பங்குபற்றியிருந்தார்.

தற்போதைய கொவிட் நோய்த்தொற்று நிலைமைகள் காரணமாக, வரலாற்றில் முதல் முறையாக, இந்த ஜம்போரி மெய்நிகர் தொழில்நுட்பத்தில் மூன்று நாள்கள் (16, 17 மற்றும் 18) உலகெங்கிலும் இருந்து நூறு நாடுகளைச் சேர்ந்த 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சாரணர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

'கலாசார ரீதியாக ஒரே சாரணர் உலகம்' என்ற கருப்பொருளின் கீழ் இடம்பெறும் உலகளாவிய கலாசார சாரணர் ஜம்போரியின் மூலம், தற்போதைய கொவிட் நோய்த்தொற்று நிலைமைகளுக்கு மத்தியில், வீடுகளில் இருக்கும் சாரணர்களுக்கு கலாசார ரீதியாக பல்வேறு புத்தாக்க நிகழ்ச்சித்திட்டங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

'எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய காலநிலை மாற்றம், மோதல்கள் மற்றும் தொற்றுநோய், உயிர்ப் பல்வகைமை இழப்பு, சுற்றுச்சூழல் அழிவு, உணவுப் பாதுகாப்பு, நீருக்கான அணுகல் போன்ற பிரச்சினைகள், எதிர்காலத்தில் வெற்றிகொள்ள வேண்டிய சவால்களாகும். இந்த எதிர்காலச் சவால்களை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளத் தேவையான திறன்களை இளைஞர்களுக்கு அளிக்க வேண்டும்' என்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

எமது வாழ்வொழுங்கை மாற்றிக் கொள்வதற்கு எம்மைக் கட்டாயப்படுத்தும் உலகளாவிய கொவிட் 19 தொற்று நோய் நிலைமைகளுக்கு மத்தியில், அதனை ஒரு சவாலாகக் கருதாது, தற்போதைய தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி சாரணர் இயக்கம் மேற்கொண்டுள்ள முன்னெடுப்பு, எளிய ஆனால் ஆழமான முன்னுதாரணத்தை வழங்கியிருக்கிறது' என, ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பல்வேறு நாடுகளுக்கே உரிய தனித்துவமான கலாசாரப் பெறுமானங்களை உள்ளடக்கிய 'உலகளாவிய கலாசார சாரணர் ஜம்போரி',



இலங்கையின் தலைமை சாரணரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில், ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் ஆரம்பமானது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள தனித்துவமான கலாசார வேறுபாடுகள் மற்றும் பாரம்பரியங்களை ஒவ்வொருவரிடம் இருந்தும் கற்றுக்கொள்வது, எதிர்கால உலகளாவிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அடித்தளமாக அமையும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

தற்போதைய இளைஞர்கள் ஒவ்வொருவருக்கும் இடையில் ஏற்படுத்தப்படும் உறவுகள், எதிர்காலத்தில் தெளிவான உலகளாவிய நிலைப்பாட்டுக்குக் காரணமாக அமையும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சாரணர் வரலாற்றில் முதன் முறையாக இணைய தொழிநுட்பத்தின் ஊடாக இடம்பெறும் சர்வதேச சாரணர் ஜம்போரிக்கு, சாரணர்கள் மற்றும் சாரணர் தலைவர்கள் இருபதாயிரத்துக்கும் அதிகமானவர்கள் பங்குபற்றினர் என, ஜம்போரி ஆலோசகர் உலக சாரணர் குழு உறுப்பினர் சட்டத்தரணி ஜனப்ரித் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் விசேட அதிதியாக, உலக சாரணர் குழுவின் தலைவர் கிரேக் டேர்பி பங்குபற்றினார். உலக சாரணர் சங்கத்தின் தலைவர்கள், ஏனைய நாடுகளின் சாரணர் ஆணையாளர்கள் உள்ளிட்ட உலகத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.07.2021 இல் வெளியிடப்பெற்றது.